
# கீதாசார்யன் 546

कर्मण्येवाधिकारस्ते मा फलेषु कदाचन



**ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்**

ஆழ்வார்கள் வாழி அருளிச்செயல் வாழி
தாழ்வாதுமில் குரவர் தாம் வாழி – ஏழ்பாரும்
உய்ய அவர்கள் உரைத்தவைகள்தாம் வாழி
செய்யமறை தன்னுடனே சேர்ந்து.

| ஆண்டு **46** | நம்மாழ்வார் ஆண்டு 5125 சோபக்ருத் பங்குனி (மார்ச் 2024) | இதழ் **6** |
| --- | --- | --- |


# நல்வார்த்தைத் திரள்


*ஸ்ரீமதுபயவேதாந்த மஹாவித்வான் காஞ்சீ ப்ரதிவாதி பயங்கரம்*

**அண்ணங்கராசார்ய ஸ்வாமி**


46. பத்மே த்வந்நயநே ஸ்மராமி ஸததம் பாவோ பவத்குந்தலே
நீலே முஹ்யதி கிம் கரோமி மஹிதை: க்ரீதோஸ்மி தே விப்ரமை:
இத்யுத்ஸ்வப்நவசோ நிசம்ய ஸருஷா நிர்பர்த்ஸிதோ ராதயா
க்ருஷ்ணஸ் தத்பரமேவ தத் வ்யபதிசந் க்ரீடாவிட: பாது வ:



கண்ணபிரான் ராதையென்கிற கோபியோடு சயனித்துக் கிடக்கும்போது வாய்வெருவுகின்றான்; பெருமாள் திருமொழியில் *கருமலர்க்கூந்தலொருத்திதன்னைக் கடைக்கணித் தாங்கே யொருத்திதன்பால் மருவி மனம்வைத்து மற்றொருத்திக் குரைத்து ஒருபேதைக்குப் பொய் குறித்துப் புரிகுழல் மங்கை யொருத்திதன்னைப் புணர்தி அவளுக்கும் மெய்யனல்லை* என்றருளிச் செய்த க்ரமத்திலே கண்ணனுடைய மனம் எங்கும் புக்குத் திரியுமாதலால், ராதை அருகிலிருப்பதை மறந்து மூன்று காதலிகளைப் பற்றி வாய் வெருவினான்.

47. பத்மே த்வந்நயநே ஸ்மராமி ஸததம் – பத்மா என்று ஒரு காதலியின் பெயர் அவளைப் பத்மே! என்று ஸம்போதித்து உன் கண்ணழகை மறக்க முடியாமல் ஸதா அதனையே சிந்தித்துக் கொண்டிருக்கிறேன் என்றான்.




http://acharya.org

48. பாவோ பவத்குந்தலே நீலே! முஹ்யதி – நீலா என்று மற்றொரு காதலியின் பெயர்; அவளை நீலே! என்று ஸம்போதித்து எனது கருத்தெல்லாம் உனது கூந்தலிலேயே மயங்கிக் கிடக்கிறது என்றான்.

49. மஹி! தே தை: விப்ரமை: க்ரீதோஸ்மி, கிம் கரோமி – மஹீ என்று ஒரு காதலிக்குப் பெயர்; அவளை மஹி! என்று ஸம்போதித்து உன்னுடைய அப்படிப்பட்ட விலாஸங்களுக்கு நான் தோற்றிருக்கிறேன், என்ன பண்ணுவேன்? என்றான். எம்பெருமானுக்கு ஸ்ரீதேவி, பூதேவி, நீளாதேவிகள் மூவரும் ப்ரதான திவ்ய மஹிஷிகளாதலால் பத்மே! என்று ஸ்ரீதேவியையும், மஹி! என்று பூதேவியையும், நீலே! என்று நீளாதேவியையும் விளித்து வாய்வெருவினது ஒக்கும்.

50. அருகிலிருந்த ராதையானவள் இதைக் கேட்டவாறே சீறத் தொடங்கினாள். நான் பக்கத்திலிருக்க இப்படி மநஸா வாசா வ்யபிசரிப்பதுமுண்டா வென்று கோபித்தாள். அப்போது கண்ணபிரான் வெகு சாதுரியமாய் அவளை ஸமாதானப்படுத்தினன்; உன்னையல்லது வேறொரு வ்யக்தியை நான் கனவிலு மறியேனே; நான் இப்போது சொன்னதெல்லாம் உன்னைப் பற்றியே காண் என்று ஸமர்த்தனம் செய்துவிட்டான், அது எங்ஙனே?

51. பத்மே என்றதும், நீலே என்றதும், மஹி என்றதும் ஸம்போதனமாக முன்பு நின்றன. இப்போது அப்படியில்லை. ராதை அருகிலிருப்பவளாதலால் அவளை நோக்கியே எல்லாம் சொல்லுகிறபடி.. ராதே என்கிற எம்போதனம் மாநஸமாகக் கடவது. என் காதலீ! ''த்வந்நயநே பத்மே ஸ்மராமி'' – உன் கண்களைத் தாமரை மலர்களாகவே எண்ணுகிறேன். (பத்மம், பத்மே, பத்மாநி,) ''பாவ: நீலே பவத்குந்தலே முஹ்யதி'' – கருநிறத்ததான உனது கூந்தலிலேயே என் சிந்தனை. (நீலே, நீலயோ:, நீலேஷு.) ''மஹிதை: தே விப்ரமை: க்ரீதோஸ்மி'' – முன்பு மஹி, தை: – என்று இரண்டு பதமாகக் கொள்ளப்பட்டது. இப்போது ஒரே பதமாகக் கொள்க. மஹிதமென்றால் சிறந்ததென்கை. சிறந்தவையான உனது விலாஸங்களாலே நான் விலைக்கு வாங்கப்பட்டேன் என்று – எல்லாம ராதையையே நோக்கிச் சொன்னதாக ஸமார்த்தித்தானாயிற்று. இது ஒரு சாதுர்யமான உக்தி விந்யாஸம்.

52. மற்றுமொரு ஸம்ஸ்க்ருத சமத்காரம்.

காளிந்தி ப்ருஹி, கும்போத்பவ, ஜலதிரஹம் நாம க்ருஹ்ணாஸி கஸ்மாத்
சத்ரோர் மே, நர்மதாஹம் த்வமபி வதஸி மே நாம கஸ்மாத் ஸபத்ந்யா:,
மாலிந்யம் தர்ஹி கஸ்மாதநுபவஸி? மிலத்கஜ்ஜலைர் மாலவீநாம்
நேத்ராம்போபி: கிமாஸாம் ஸமஜநி, குபித: குந்தலக்ஷோணிபால:

குந்தல தேசத்து அரசனுக்கும் மாலவதேசத்து அரசனுக்கும் போர்நடந்து அதில் மாலவதேசத்து அரசன் தனது ஸேனைகளோடுங்கூடத் தோல்வியடைந்து மாண்டொழித்தானென்கிற வரலாற்றை ஒரு மஹாகவி நேர்முகமாகச் சொல்லாமல் வெகு சமத்காரமாகத் தெரிவிக்கிறார். இந்த உக்தி சமத்காரம் ரஸித்து அநுபவிக்கத்தக்கது. நர்மதா நதியானது மாலவதேச ப்ராந்தத்தில் ப்ரவஹிக்கின்றது. இந்த நதியானது ஸமுத்ரத்தில் போய்ச் சேர்ந்ததாம். அப்போது ஸமுத்ரராஜனுக்கும் இந்த நதிக்கும் ஒரு ஸம்பாஷணை நடந்ததாக வைத்து அதன் மூலமாக குந்தலதேசத்து ராஜாவின் வெற்றியும் மாலவ தேசத்து மன்னவனின் தோல்வியும் தெரிவிக்கப்படுகின்ற அழகு அற்புதம்.



http://acharya.org

53. தன்னிடம் வந்து சேருகின்ற நர்மதா நதியை நோக்கி ஸமுத்ரராஜன் ‘‘காளிந்தி! ப்ருஹி’’ என்றான். அதாவது, ‘‘யமுநா நதியே! என்ன ஸமாசாரம்? சொல்லு’’ என்று வினவினான். நர்மதா நதியே! என்று விளிக்க வேண்டியிருக்க, அங்ஙனம் விளியாமல் யமுநா நதியே என்று விளித்ததனால் நர்மதா நதிக்குக் கோபமுண்டாகி அதனால் ஸமுத்ர ராஜனை நோக்கி ‘‘ஹே ஸமுத்ரராஜ!’’ என்று விளியாமல் ‘‘அகஸ்த்யரே!’’ என்று விளித்து, ‘‘என்ன ஸமாசாரம்? சொல்லும்’’ என்றதாம் நர்மதாநதி. ‘‘ப்ருஹி’’ என்பதை ‘‘கும்போத்பவ!’’ என்ற விளியோடும் கூட்டுக. கடலரசனை நோக்கி ‘‘அகஸ்த்யரே!’’ என்று விளிக்கவே அவன் சீறி ‘‘ஜலதி: அஹம் மே சத்ரோ: நாம கஸ்மாத் க்ருஹ்ணாஸி?’’ என்றானாம். ‘‘யமுநாநதியே! நான் ஸமுத்ரராஜனல்லவா? உனக்குத் தெரியவில்லையா? அப்படியிருக்க, ஒருகால் என்னைக் குடித்ததனால் எனக்குப் பகைவரான அகஸ்தியருடைய பெயரால் என்னை ஏன் விளிக்கின்றாய்?’’ என்றான்.

54. அதற்கு பதிலாக யமுனை கேட்டது. ‘‘அஹம் நர்மதா, மே ஸபத்ந்யா: நாம த்வமபி கஸ்மாத் வதஸி?’’ – நான் நர்மதையல்லவா? அப்படியிருக்க எனக்குச் சக்களத்தியான யமுனையின் பெயரையிட்டு என்னை என் விளித்தாய்?’’ என்று.

55. அதன்மேல் கடல் கேட்டது, ‘‘மாலிந்யம் தர்ஹி கஸ்மாதநுபவஸி?’’ – நீ நர்மதையானால் வெளுத்திருக்கவேணுமே; அப்படியில்லையே, கறுத்திருக்கின்றாயே? எதனால் இந்தக் கறுப்பு உனக்கு உண்டாயிற்று?’’

56. அதற்கு நர்மதையின் பதில் ‘‘மிளத் கஜ்ஜலை: மாலவீநாம் நேத்ராம்போபி:’’ – ‘‘மாலவ தேசத்து மாதர்கள் அழுதுகொண்டே என்னிடத்தில் ஸ்நானம் பண்ணினார்கள்; அப்போது அவர்களுடைய கண்ணிலிருந்த மையோடு கூடிய கண்ணீர் வெள்ளம் பெருகிற்று. அதனால் எனக்குக் கறுப்பு ஏறிற்று.

57. அதன்மேல் கடலரசன் கேட்டான் ‘‘ஆஸாம் கிம் ஸமஜநி?’’ – ஸ்த்ரீகள் நீராடும்போது (கண்)மையை அவித்துக்கொண்டு அழுவது வைதவ்யம் நேருகின்ற நாளிலேயாதலால் அந்த மாலவ தேசத்து மாதர்களுக்கு வைதவ்யம் நேர்ந்திருக்கக் கூடுமென்றெண்ணிய கடலரசன் அதை வ்யக்தமாகத் தெரிந்துகொள்ள விரும்பி ‘‘அந்த ஸ்த்ரீகளுக்கு என்ன நேர்ந்துவிட்டது?’’ என்றான். அதற்கு நர்மதையின் பதில், ‘‘குபித: குந்தல க்ஷோணிபால:’’ குந்தள தேசத்து ராஜா சீற்றங்கொண்டார் என்றாள். சீற்றத்தினால் மாளவதேசத்து அரசனையும் அவனது பரிகரங்களையும் கொன்றிட்டதனால் மாளவநாட்டு மாதர்கள் ஸௌமங்கல்யமிழந்து மையை அவித்து அழுதுகொண்டே நீராட, அதனால் நான் கறுப்புநிறம் ஏறப்பெற்றேன் என்றபடி.

56. குந்தள நாட்டரசனுடைய வெற்றியை இங்ஙனே வெகு சமத்காரமாகத் தெரிவித்தது மன்றியில் அவ்வரசனால் கொல்லப்பட்ட வீரர்கள் பலகோடி நூறாயிரக் கணக்கானவர்கள் என்பதும் இதில் த்வநி முறையில் காட்டப்பட்டது. ஒரு பெரிய நதியானது தன் நிறம் மாறிக் கருமை நிறம் கொண்டதென்றால் எத்தனை கோடிக் கணக்கான மாதர்கள் அழுது மை கலந்த தண்ணீர் வெள்ளத்தைப் பெருக்கியிருக்க வேணுமென்று ஊஹித்துப் பார்க்க.



http://acharya.org

# உதகஶாந்தியின் உட்பொருள்

ஶ்ரீமதுபயவே. வில்லூர் நடாதூர் ஶ்ரீபாஷ்யஸிம்ஹாஸனம் சாஸ்த்ரஸாஹிதீவல்லப
**கருணாகராசார்யஸ்வாமி**

அடுத்து உதகஶாந்தி மந்திரங்களின் தொகுப்பில் அஜ்யானீக்கள் எனப்படும் ஐந்து மந்திரங்களால் ஆன பதினெட்டாவது அனுவாகத்தில் மூன்றாவது மந்திரம். மந்திரத்தின் முழுவடிவம்:–

க்ரீஷ்மோ ஹேமந்த உத நோ வஸந்தஶ் ஶரத்வர்ஷாஸ்ஸுவிதந்நோ அஸ்து

தேஷாம் ருதூநாகும் ஶதஶாரதாநாம் நிவாத ஏஷாமபயே ஸ்யாம

இந்த மந்திரமும் சென்ற மந்திரம் போல த்ரிஷ்டுப் என்ற யாப்பிலே அமைந்த செய்யுள் அதாவது ருக் ஆகும்.

இச் செய்யுள் மந்திரத்தில் முதல் இரண்டு அடிகளில் க்ரீஷ்மம்,ஹேமந்தம் மற்றும் வஸந்தம் ஶரத் வர்ஷா என்ற இவைகள் ஒவ்வொன்றும் அடியோங்களுக்கு நன்கு வந்து சேர்ந்ததாக அமைய வேண்டும் என்று ப்ரார்த்தனை செய்யப்படுகிறது. இங்கு பட்டியல் இடப் பட்டவைகள் ருதுக்கள் என்று எளிதாகவே புரிகின்றது.

அந்த ருதுக்கள் எல்லாம் நம்மை நன்கு வந்து சேரட்டும் என்றால் நல்ல கதி உடையவைகளாக நம்மை வந்து அடையட்டும் என்று பொருள்.

இது தான் மூலத்தில் ஸுவிதம் என்ற பதத்தாலே கூறப்படுகிறது. ஸு + இதம் என்பது ஸ்விதம் என்று கூட்டுச் சொல்லாகிட வேண்டும் என்பது பொது விதி. இங்குச் சிறப்பான ஒரு புணர்ச்சி விதிப்படி ஸுவிதம் என்ற வடிவம் வந்துள்ளது. அதைப் போலவே சில சிறப்பு விதிகளால் பத பாடத்தில் இப் பதத்தினை ஸு+ இதம் என்பது போல உடைத்துக் காட்டாது ஸுவிதம் என்றே ஓதும் மரபு ஏற்பட்டுள்ளது.

ஸுவிதம் என்பதை ஶ்ரீஸாயணாசார்யர் தங்கள் காலத்துக்கு ஏற்ற போக்யப் பொருளை அளிப்பதாக அணுகி அமைய வேண்டும் என்று தெளிவு படுத்திடுகிறார்.

வஸந்தம் என்றால் தளிரும் மல்லிகை முதலிய மலர்களுமாக எங்கும் நறு மணம் பரவிடும் காலம்.

இந்த ருதுவில் ஆங்காங்கு மன்மதோத்ஸவங்கள் இருக்கும் அதாவது வஸிக்கும்.அதனால் இதற்கு வஸந்தம் என்று பெயர்.

வஸந்த்யத்ர மதநோத்ஸவா இதி. ''த்ரூ–பூ–வஹி–வஸி–பாஸி–ஸாதி–கடி–மண்டி–ஜி–நந்திப்யஶ்ச '' (இதி ஜச்) என்ற உணாதி ஸூத்ரப் படி வஸ என்கிற வினைவேரின் மீது ஜச் என்ற விகுதி இணைந்து வஸந்த என்ற இப் பெயர்ச் சொல் உருவாகிடுகின்றது.

இந்த உணாதி ஸூத்ரப்படி

1த்ரூ– 2பூ– 3வஹி– 4வஸி– 5பாஸி– 6ஸாதி–7கடி– 8மண்டி– 9ஜி– 10 நந்திப்யஶ்ச (ஜச்) எனப் பத்து வினை வேர்களுடன் ஜச் என்ற விகுதி இணைகையில் கீழ்க்கண்ட பெயர்ச் சொற்கள் ந்த என்ற வடிவில் வரும் ஜச் என்ற விகுதியைப் பெற்றுக் கீழ்க்கண்ட பொருளில் வருகின்றன.



http://acharya.org

1.தரந்த:-கடல்

2.பவந்த:-காலம்

3.வஹந்த:-வாயு

4.வஸந்த:-ருது

5.பாஸந்த:-கதிரவன்

6.ஸாதந்த:-பிக்ஷு

7.கண்டயந்த:-மேக:

8.மண்டயந்த:-அணிகலன்

9. ஜயந்த:-இந்திரனின் குமாரன்

10நந்தயந்த:-மகிழ்ச்சி தருபவன்.

வஸந்த ருது, வஸந்தருது ஆகவே திகழ்ந்து கொண்டு நம்மை நன்கு நாடி வர வேண்டும் என்ற படி.

த்ருமா: ஸபுஷ்பா: ஸலிலம் ஸபத்மம் ஸ்த்ரிய: ஸகாமா: பவந: ஸுகந்தி:

ஸுகா: ப்ரதோஷா திவஸாஶ்ச ரம்யா ஸர்வம் ப்ரியே ! சாருதரம் வஸந்தே

என்று ருதுஸம்ஹாரத்திலே சொல்லப்படுகின்றது.

"மரங்கள் மலர்களுடன் திகழ்கின்றன. குளங்கள் தாமரை மலர்களுடன் திகழ்கின்றன. மங்கையர்கள் காதலுடன் உள்ளார்கள். காற்று நறுமணத்துடனே வீசுகின்றது. முன்னிரவுக் காலங்கள் சுகத்தைத் தருகின்றன. நாள்கள் எல்லாம் மகிழ்ச்சி தருகின்றன. வஸந்தருதுவில் அனைத்துமே நன்கு உள்ளது" என்பது இதன் பொருள்.

பஞ்சாங்கம் வஸந்தருது என்று காலத்தைக் காட்டிடுகின்றது.ஆனாலும் சில ஸமயங்களில் வஸந்து ருதுவுக்கே உரிய மேற்படி சிறப்புக்கள் எதுவும் இல்லை. அனுபவமும் கிடைக்கவில்லை. அப்படிப் பட்ட நிலை இல்லாது அந்த அந்த ருதுக்களுக்கு உரிய இன்பங்களை அனுபவித்திடுமாறே அந்த ருது அமைந்திட வேண்டும் என்று ப்ரார்த்தனை.

உண்மையில் நம்மை அணுகி நெஞ்சின் உள்ளே புகுந்து தாக்கம் தரும் தன்மை இருப்பதால் தான் இக் கால மாற்றங்கள் ருது: எனப் பெயர் பெறுகின்றன. இதனை ருச்சதி இதி ருது: என்று இலக்கண நெறியினர் விளக்கிடுவார்கள்.இங்குள்ள வினைவேர் ரு என்பது. அணுகி நெஞ்சின் உள்ளே புகுந்து தாக்கம் தருபவர் என்ற பொருளில் வரும் பெயர்ச் சொல்லைப் பெற ரு என்னும் பகுதியுடன் து என்கிற விகுதியைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். உணாதி என்னும் வடமொழி இலக்கணப் பிரிவில் அர்தே??ச து: என்ற ஸூத்ரம் இந்த வழிமுறையை நமக்குக் காட்டிடுகிறது.

இப்படிப் பட்ட தன்மை எம்பெருமானுக்கே இருப்பதால் எம்பெருமானுக்கு 'ருது:' என்ற திருநாமம் ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாமத்தில் (ஸ்ரீபராசரபட்டர் விரிவுரைப் படி) 417-ஆவது திருநாமமாகத் தொடுக்கப் பட்டுள்ளது.

ஸ்ரீமதுபயவே வாகம்ருவர்ஷீ வேளுக்குடி வரதாசார்ய ஸ்வாமி திருவடிவாரத்தில் தாம் கேட்ட ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாம பாஷ்யப் பேருரைகளைத் தொகுத்துக் கொடுத்த விளக்க உரையில் யதிராஜபாதுகையின் ஆசிரியர் டாக்டர் வி.வி.ராமானுஜாசார்ய ஸ்வாமி இதை விவரிக்கையில்



http://acharya.org

“வந்தருளி என் நெஞ்சிடம் கொண்ட வானவர் கொழுந்தே!” என்ற நோற்றநோன்புத் திருவாய்மொழியின் ஏழாம் பாசுரத் தொடரையும்

“வந்தாய் என் மனம் புகுந்தாய் மன்னி நின்றாய் நந்தாத கொழுஞ்சுடரே! எங்கள் நம்பீ!” என்ற கண்ணார்கடல்சூழ்த் திருமொழியின் எட்டாம் பாசுரத்தொடரையும் காட்டி மிகப் பொருத்தமான முறையில் நம்மை அனுபவிக்க வைத்துள்ளார்.

வஸந்தம் முதலிய காலங்கள் அவனைப் போன்று (அவன் அருளால்) இத் தன்மையைப் பெற்றிருப்பதால் அவைகளும் ருது என்ற பெயரால் அழைக்கப் படுகின்றன என்று அங்கு தமது பாஷ்யத்திலே ஸ்ரீபராசரபட்டர் அருளிச் செய்துள்ளதையும் காண்க.

இது சரி. வஸந்த ருது வேண்டுமானால் வந்து அணைந்து நெஞ்சில் மன்னும் தன்மை உடையதாக இருக்கலாம்.ஆனால் க்ரீஷ்ம ருதுவுக்கு அது பொருந்துமா?

க்ரீஷ்ம ருதுவிற்கு அப் பெயர் வருவதற்குக் காரணம் யாது? க்ரீஷ்ம என்ற சொல் க்ரஸதே ரஸாந் என்ற அடிப் படையிலே பிறக்கிறது. க்ரஸு அதனே (விழுங்குதல்) என்ற வினை வேர் மக் என்று விகுதியுடன் இணைகையில் இச் சொல் பிறப்பதாக விளக்கம் தரப் பட்டுள்ளது.

ஆம். க்ரீஷ்ம ருதுவில் பொதுவாக எங்கும் நீர் நிலைகள் வற்றத் தொடங்குவதைப் பார்க்கிறோம். இப்படி வளங்களை விழுங்கும் ருது க்ரீஷ்மம். அதனை எப்படி வந்தணைந்து நெஞ்சில் மன்னும் தன்மையை உடையது என்று கூறலாம்? என்ற கேள்வி எழுகிறது.

உண்மையில் இப்படிச் சுருங்குவது இருப்பதால் தான் மலரும் காலம் வந்தணைந்து நெஞ்சில் மன்னுவது மிக எளிதாக ஆகிறது.அதற்கு உதவிடுவதால் க்ரீஷ்மம் கூட வந்தணைந்து நெஞ்சில் மன்னுகிறது.

இந்த மந்திரத்தில் வேதம் 1.க்ரீஷ்மம்,2.ஹேமந்தம் மற்றும் 3.வஸந்தம் 4 *ஶ*ரத் 5. வர்ஷா என்ற இவைகள் ஒவ்வொன்றும் அடியோங்களுக்கு நன்கு வந்து சேர்ந்ததாக அமைய வேண்டும் என்ற வேண்டுவதைக் காண்கின்றோம்.

ருதுக்கள் ஆறு அல்லவா? ஏன் இங்கு ஐந்து மட்டுமே சொல்லப் பட்டுள்ளன? என்ற கேள்வி எழத் தானே செய்யும்.

வேதத்தில் ஓர் ஆண்டுக்கு வஸந்தம் க்ரீஷ்மம், வர்ஷா,சரத் ஹேமந்தம் *ஶிஶி*ரம் என ஆறு ருதுக்கள் என்று பல இடங்களில் கூறப் பட்டுள்ளது. ஆனாலும் த்வாத*ஶ* மாஸா: பஞ்சர்தவ: என்பது போன்ற சில இடங்களில் ஓர் ஆண்டுக்கு ஐந்து ருதுக்கள் என்றும் கூறப் பட்டுள்ளது. அப்படி ஐந்து ருதுக்கள் என்னும் இடத்தில் ஹேமந்தம், *ஶிஶி*ரம் ஆகிய இரண்டையும் ஒன்றாக்கி ருதுக்களை ஐந்து என்று கணக்கிட்டுக் கொள்வது மரபு. இங்கு அம் மரபு பின்பற்றப் பட்டுள்ளது.

இனி ருதுக்களைப் பட்டியல் இடுகையில் வஸந்தம் க்ரீஷ்மம், வர்ஷா,*ஶ*ரத் ஹேமந்தம் என்று வஸந்தத்தில் தொடங்கித் தானே பொதுவாகப் பட்டியல் இடுவார்கள். இங்கு அம் முறை பின் பற்றப் படவில்லை. மாறாக 1.க்ரீஷ்மம்,2.ஹேமந்தம் மற்றும் 3.வஸந்தம் 4 *ஶ*ரத் 5. வர்ஷா என்று வரிசையே மாறி உள்ளது. ஏன் இப்படி மாறி அமைந்துள்ளது என்ற ஆராய வேண்டும் ஸ்ரீபட்டபாஸ்கராசார்யர் இங்கே குறிப்பிட்டுள்ளார். “க்ரமவி*ஶே*ஷா*ஶ்*ரயணே காரணம் சிந்த்யம்” என்று அவர் அருளிடுவதை நோக்குங்கள்.

பரமைகாந்திகளான நமக்கு க்ரீஷ்மத்தை முதலில் வைத்ததற்கு ஒரு காரணம் சொல்ல



http://acharya.org

இயலும்.வஸந்தம் என்பது வாழ்வின் இளமைக் காலத்தின் குறியீடு. வாழ்வின் வஸந்தம் என்று கவிகள் இளமையைப் பாடுவதைப் பார்க்கின்றோம். ஆழ்வாரும் கிளரொளி இளமை என்று இளமைக்கு அடைமொழி தருவதையும் காண்கின்றோம். க்ரீஷ்மம் என்பது வாழ்வின் முதுமைக்குக் குறியீடு.முதுமை வந்தவாறே சில புலன்களுக்கு உள்ள பசி இல்லாமல் போகும்.அந்தப் புலன்களின் பசியைப் போக்க இளமையில் பாடுபட்டு அலைந்து திரிந்து வீணடித்த காலங்கள் எவ்வளவு? அக்காலங்களிலேயும் ஸ்ரீபாஷ்ய பகவத் விஷயங்களிலேயே ஈடு பட்டிருந்தால் இன்னும் எவ்வளவு நலம் பெற்றிருப்போம் நாம் என்று இப் பொழுது வாழ்வின் க்ரீஷ்மமான முதுமையில் படிந்த அடியேன் நினைத்து நினைத்து இந்த க்ரீஷ்மம் வாழ்வின் முதலிலேயே வந்திருக்கக் கூடாதா? என ஏங்குவது உண்டு. இந்த அருமையை உணர்த்திடும் வகையில் வேதத்தாழ்வான் க்ரீஷ்ம ருதுவுக்கு முதல் இடம் கொடுத்துப் பட்டியல் இடுகின்றான் என்று ஆசார்யர்களுடைய அருளினால் இந்த அடியனேனுக்குத் தோன்றுகின்றது.

அடுத்து அவனை வழிபடுவதற்கே அவன் கொடுத்த ஹேமந்த ருது. ஹந்தி லோகாந் ஶைத்யேநேதி ஹேமந்த: என்ற அடிப்படையில் பெயர் பெற்று மக்கள் குளிர அவர்களை வந்து அணையும் ருது இது. ஹன என்கிற வினை வேர் ஹிம்ஸை செய்தல், செல்லுதல் என்ற இரு பொருள்களிலும் பயிலும். ஹன ஹிம்ஸாகத்யோ: என்று தாதுபாடம். அடியேன் ஹந என்கின்ற வினைவேருக்குச் செல்லுதல் என்ற இரண்டாவது பொருளை ஏற்று இப்படி விளக்கினேன்.இந்த ருதுவில் தான் அவனுக்கும் அவன் அடியவர்களுக்கும் பிடித்த மார்கழி இடம் பெறுகின்றது. இருக்கும் இடத்திலே திருப்பாவை அனுஸந்தானத்துடன் எம்பெருமானை அனுபவிக்க ஏற்ற ருது. திருவருள் பெற்று இன்புற்றுக் கூடி இருந்து குளிர ஏற்ற பனிக்காலம்.

அடுத்து பரமைகாந்திகளுக்கு பகவதனுபவத்தை தரும் காலம் போல மற்றையவர்களுக்கும் ஆக அனைவருக்கும்மே இனிய போக்யங்களைத் தரும் வஸந்தம் என்ற ருதுவுக்கு இடம் கொடுத்தான்.

அடுத்து ஶரத் ருது. ஶ்ரூ ஹிம்ஸாயாம் என்ற வினைவேருடன் “ஶ்ரூ த்ரூபஸோ’தி:” என்கிற உணாதி ஸூத்ரப்படி அதி: என்ற விகுதி இணைந்து உருவாகும் வினையால் அணையும் பெயர்ச் சொல் ஶரத் என்பது.கிருமிகளின் மிகுதியால் மக்களுக்கு இன்னல் தரும் ருது ஆயினும் திவ்யதேஶ யாத்திரைகளுக்கு மிக உகந்த ருது. எனவே இதனை அடுத்தபடியாகப் பட்டியலில் வைத்தான்.

அடுத்து வர்ஷம் என்கிற மழையைத் தன்னகத்தே உடையதால் வர்ஷா: என்றே பெயர் பெற்ற மாரிக்காலத்தை அதாவது நிறைவைத் தரும் காலத்தை நிறைவில் வைத்தான்.

ஸகநவாரிதவாரிஸமாகுலா நிகிலபூ: ப்ரபலோதகபூரிதா
ஸமதவாதகரா விதிஶோ திஶோ முதிதகீடக்ருமிப்ரபவா மஹீ
நீலஶஸ்யஹரிதோஜ்ஜ்வலா மஹீ குல்யகாஸலிலஸம்ப்லுதா ஸரித்
இந்த்ரகோபகவிராஜிதா தரா பங்கபூஷணவிபூஷிதா ச ஸா
பத்ரீ கூஜதி காநநே ச ஸரஸீ ம்லாநாம்புபூர்ணா ததா
ஹம்ஸா மாநஸமாவ்ரஜந்தி கமலாந்யம்லாநதாம் யாந்தி ச
கர்ஜ்ஜந்மேகமஹேந்த்ரகந்தரதரீ ஸஸ்யாவ்ருதா ஶ்யாமலா
பாத்யேவம் பவநஸ்ய கோபநகரோ வர்ஷாருது: ஶோபித:



http://acharya.org

“நீருண்ட மேகங்கள் பொழிந்த நீரால் நிறைந்த பூமி, திசைகள் எல்லாம் போதையுடன் உள்ள காற்றுக்கள். மகிழ்ந்த பூச்சிகளும் புழுக்களுமாக பூமி. பச்சைப்பயிர்கள் நிறைந்த நிலங்கள். கால்வாய்களுக்கு திறந்து விடப்பட்ட நீர்கள் நிறைந்த ஆறுகள். பட்டாம் பூச்சிகள் பரவிக் கிடக்கும் பார். சேறுகளாம் அணிகளை அணிந்த நிலமடந்தை.காடுகளில் பறவைகள் கூவுகின்றன.கலங்கிய நீர் வெள்ளம். அன்னங்கள் மானஸரோவரத்தை நாடிப் பறக்கின்றன. தாமரைகள் வாடாமல் திகழ்கின்றன. மலை முழைகளில் மேக முழக்கங்கள் எதிரொலிக்கின்றன. பயிர்களால் மறைந்து பசுமையாகத் தோன்றும் பூமி. இப்படிக் காற்றுக்கும் சீற்றம் தரும் மாரிக்காலம் சோபனையுடன் உள்ளது” என்றெல்லாம் கவிகள் பாடும் படி நிறைவுடன் திகழும் மாரிக்காலத்தை நிறைவில் வைத்தான்.

இப்படி இந்த ருதுக்கள் அனைத்திலும் இந்த ருதுக்களாகத் தானே மலர்ந்த எம்பெருமானையே சிந்தித்து அனுபவித்து வாழும் வாழ்ச்சி வேண்டும்

இனிச் செய்யுளின் இரண்டாம் பகுதி:

தேஷாம்– அத்தகைய ஏஷாம்–இந்த *ஶ*த*ஶ*ாரதானாம்–பல்லாண்டு பல்லாண்டு ஆண்டுக்கு ஐந்து ஐந்தாக வந்தணையும் ருதூனாம்– ருதுக்களுடைய காலத்தில் எல்லாம் எம்பெருமானுடைய அனுபவித்தில் நிவாதே–காற்றுக் கூட இல்லாத இடத்திலே சஞ்சலம் இல்லாத இடத்தில் உள்ள விளக்கின் சுடர் போலே அபயே–அச்சமற்ற நிலையில் ஸ்யாம–பகவதனுபவத்தாலே உண்மையிலேயே இருப்பவர்களாக இருப்போமாக.

இப்படி அனைத்து ருதுக்களிலும் அவனையே அலைபாயா மனத்துடன் அனுபவித்துக்கொண்டு அச்சமின்றிப் பல்லாண்டு பல்லாண்டு இருப்போமாக என்ற படி.

கைத் என்பார் இதனை

Summer, winter, and spring for us,
Autumn, the rains be favorable for us;
May we enjoy the favour and protection
Of these seasons through a hundred autumns

என மொழி பெயர்த்தார்.நாமும் இதனை நமக்கேற்ற படி

Summer, winter, and spring for us,
Autumn, the rains be favorable for us;
For worshipping Him and enjoying;
May we enjoy the favour and protection
Of these seasons through a hundred autumns
For worshipping Him and enjoying;

என மாற்றிச் சுவைத்து மகிழலாம்.

கீதாசார்யன் ஆசிரியர் ஸ்ரீவேங்கடேச்வரா பக்தி தொலைக்காட்சியில் (SVBC 2) தினந்தோறும் காலை 6.00 மணிக்கு வழங்கி வரும் **ஆசார்யர் அமுதம்**, பொதிகைத் தொலைக்காட்சியில் தினந்தோறும் காலை 6.30 மணிக்கு வழங்கிவந்த **நாள்தோறும் நாலாயிரம்** ஆகியவற்றின் அனைத்துப் பதிவுகளையும் youtube.comல் எப்போது வேண்டுமானாலும் பார்க்கலாம்.



http://acharya.org

# ஸ்ரீராமநவமியும் புனர்வசுவும்

## டாக்டர் ஜயஸ்ரீ ஸாரநாதன்

இராமாயணத்திற்கும் மகாபாரதத்திற்கும் உள்ள ஒரு பெரிய வேறுபாடு என்னவென்றால், மகாபாரதப் போர் நடந்த ஆண்டு நமது கால அமைப்பில் பொறிக்கப்பட்டுள்ளது. கிருஷ்ணர் தனது ஸ்தூல சரீரத்தை விட்டு, இந்தப் பூவுலகிலிருந்து நீங்கியதற்கு முப்பதைந்து வருடங்களுக்கு முன் பாரதப் போர் நடந்தது. போர் முடிந்தவுடன் காந்தாரி கொடுத்த சாபத்தின் மூலம், போர் நடந்த முப்பத்து ஆறாவது வருடம் விருஷ்ணி வம்சம் அழியும் என்பதை கிருஷ்ணரும் ஏற்றுக் கொண்டார். கிருஷ்ணர் நீங்கின நாளன்று கலி மஹாயுகம் ஆரம்பித்து. அந்த யுகக்கணக்கையே இன்று வரை நமது காலக் கணக்காகப் பின்பற்றி வருகிறோம். இதனால், கலி மஹாயுகம் ஆரம்பித்தற்கு முப்பதைந்து வருடங்களுக்கு முன் பாரதப் போர் நடந்தது என்று நம்மால் தெளிவாகச் சொல்ல முடிகிறது. இப்படிப்பட்ட தெளிவுடன் நம்மால் இராமாயண காலத்தை, குறிப்பாக, இராமர் பிறந்த வருடத்தைச் சொல்ல முடியவில்லை. அதன் காரணத்தைப் பார்ப்போம்.

இராமாயணத்தில் இராமர் பிறந்த மாதத்தின் பெயர், திதி, நக்ஷத்திரம் மற்றும் பிறந்த லக்னம் தவிர ஆறு கிரகங்களின் இருப்பிடம் குறித்து வால்மீகி அரிய தகவல்களைக் கொடுத்துள்ளார். அவர் கொடுத்துள்ள திதி, நஷத்திரத்தை நாம் இன்றளவிலும் பின்பற்றி, ஸ்ரீராமநவமி என்று இராமபிரானது பிறந்த நாளைக் கொண்டாடி வருகிறோம். ஆனால் அவர் பிறந்த திதியான வளர்பிறை நவமியும், நக்ஷத்திரமான புனர்வசுவும், எந்த ஒரு வருடத்திலும், சித்திரை மாதத்தில் ஒன்றாக வந்ததில்லை என்பதை எத்தனை பேர் அறிந்துள்ளோம்?

இராமன் பிறந்தது, சூரியன் உச்சம் பெறும் மேஷ மாதமான சித்திரையாகும். ஆனால் பல வருடங்களில், சூரியன் மீனராசியில் இருக்கும் பங்குனி மாதத்தில் ஸ்ரீராமநவமி கொண்டாடப்படுகிறது. இதுவும் நம்மில் பலருக்குப் புரியாத புதிராக இருக்கிறது. இப்பொழுது ஒரு முக்கியமான புதிரைச் சொல்லப்போகிறேன்.

ஒவ்வொரு ஆண்டும் மாதமும் திதியும் சேரும். அதாவது ஒவ்வொரு சித்திரையிலும் வளர்பிறை நவமி வரும். அந்தத் திதியுடன், குறிப்பிட்ட நக்ஷத்திரமும் சேரும். ஆனால் வளர்பிறை நவமியுடன், புனர்வசு சேர்ந்து வராது. அப்படி வருவது பங்குனியில் அமைகிறதே தவிர, சித்திரையில் அமைவதில்லை. இந்த வருடம் (க்ரோதி வருடம்) ஸ்ரீராமநவமி சித்திரையில் வருகிறது. ஆனால் அன்றைய தினத்தில் ஆயில்ய நக்ஷத்திரம் இணைகிறது; புனர்வசு அல்ல. எப்பொழுதுமே மேஷ மாதத்தில் வளர்பிறை நவமியும், புனர்வசுவும் சேர்ந்து வராதென்றால், அப்படிப்பட்ட சேர்க்கை இராமன் பிறந்தபொழுது எப்படி சாத்தியமானது என்ற கேள்வி வருகிறது. ஆனால் வால்மீகி எழுதி வைத்துள்ளாரே, எனவே இராமன் பிறந்தபோது அவை ஒன்றாக அமைந்திருக்க வேண்டும். ஏன் தற்போதைய காலக்கட்டத்தில் அவை ஒன்று சேர்வதில்லை?

### மேஷத்தில் சூரியனுடன் திதி-நட்சத்திரம் சேராமை

இந்தச் சிக்கலைப் புரிந்து கொள்ள, சில அடிப்படை விவரங்களைத் தெரிந்து கொள்வோம். வளர்பிறை என்பது அமாவசை முடிந்தவுடன் வரும் பிரதமையிலிருந்து ஆரம்பிப்பது. சாந்திரமானத்தில் (சந்திர வட்டம்), பிரதமையிலிருந்து மாதம் ஆரம்பிக்கும். பெரும்பாலும் மீன ராசியில் சூரியன் இருக்கும்போது வரும் அமாவாசைக்கு அடுத்த நாள் சாந்திரமான மாதமான 'சைத்ர' மாதம் பிறக்கும். சூரியமானத்தில், சூரியன் மேஷ ராசிக்குள் நுழையும்போதுதான் சித்திரை மாதம் பிறக்கும். பெயர்க்



http://acharya.org

குழப்பம் இல்லாமல் இருப்பதற்கு நாம் இதனை மேஷ மாதம் என்றே குறிப்பிடுவோம். கல்வெட்டுகளில்கூட, மேஷ மாதம், ரிஷப மாதம் என்றுதான் சூரியமான மாதங்களின் பெயர்கள் காணப்படுகின்றன. இராமன் பிறந்தது மேஷ மாதம் என்பதும், அப்பொழுது வளர்பிறை நவமியும், புனர்வசுவும் ஒன்றாக வந்தன என்பதும் வால்மீகி தரும் செய்தி. ஆனால் இப்பொழுது இந்தத் திதியும், நக்ஷத்திரமும் மேக்ஷ மாதத்தில் ஒன்றிணைவதில்லை. அது ஏன்?

புனர்வசு நக்ஷத்திரம் வளர்பிறை நவமி திதியுடன் கூட வேண்டுமென்றால், (9 வது திதி) அந்தத் திதியிலிருந்து பின்னோக்கி எண்ணி, அமாவாசை என்று நடந்தது என்று கண்டுபிடிக்கலாம். ஒரு நாளைக்கு ஒரு திதி, மற்றும் ஒரு நக்ஷத்திரத்தை சந்திரன் கடப்பதால், ஒன்பது நாட்களுக்கு முன் அமாவாசை நிகழ்ந்திருக்க வேண்டும். இதன்படி, பூரட்டாதி நக்ஷத்திரத்தில் சூரியனும், சந்திரனும் கூடி அமாவாசை நிகழ்ந்திருந்தால், அதற்கு மறுதினமான உத்திரட்டாதியில் பிரதமை வரும், அன்றே சாந்திரமானத்தின் சைத்ர மாதம் பிறந்து விடும். அடுத்த நாள் ரேவதியில் துவிதியை வந்து விடும். இப்படி சந்திரன் முன்னேறிக் கொண்டே, 9–ஆவது திதியான நவமியில் புனர்வசுவுடன் இணைவான். ஆனால் அந்த நேரத்தில் சூரியன் மீன ராசியில்தான் இருக்குமே தவிர, மேஷத்திற்கு வந்திருக்காது.

ஏனெனில், சூரியன் ஒரு நாளைக்கு ஒரு பாகைதான் நகரும். ஒரு நக்ஷத்திரம் என்பது 13–20 பாகைகளைக் கொண்டது. ஒரு நக்ஷத்திரத்தைக் கடக்க, சூரியனுக்கு 13 நாட்களும், 8 மணி நேரமும் ஆகும். அமாவாசையின் போது, சூரியன், பூரட்டாதி நக்ஷத்திரத்தின் கடைசி பாகையில் இருந்ததாகவே வைத்துக் கொள்வோம். அடுத்த ஒன்பது நாட்களில் சந்திரன் நவமி–புனர்வசுவை அடையும் பொழுது, சூரியன் ஒன்பது பாகைகள் நகர்ந்து உத்திரட்டாதி நக்ஷத்திரத்தில் 9–ஆவது பாகையில் இருக்கும். உத்திரட்டாதியில் மேலும் நான்கு பாகைகளும், அடுத்த நட்சத்திரமான ரேவதியில் 13.20 பாகைகளும் இருப்பதால் சூரியன் மேஷத்துக்குள் நுழைய 17 நாட்கள் ஆகும். அதற்குள் சந்திரன் பௌர்ணமியைக் கடந்து தேய்பிறையில் இருப்பான். சூரியன் இன்னும் மீன ராசியில்தான் இருப்பான்.

இனி அடுத்த சாத்தியக் கூற்றினைப் பார்ப்போம். சூரியன் ஒரு நக்ஷத்திரத்தைக் கடக்க 13 முதல் 14 நாட்கள் வரை எடுத்துக் கொள்கிறான். சந்திரன் ராசி மண்டலத்தை ஒரு சுற்று சுற்றி வர எடுத்துக் கொள்ளும் சுமார் 30 நாட்களில், சூரியன் இரண்டு நக்ஷத்திரங்களைக் கடந்து விடுவான். அதாவது ஒரு அமாவாசையிலிருந்து, அடுத்த அமாவாசையை அடைவதற்குள், சூரியன் இரண்டு நக்ஷத்திரங்கள் கடக்கிறான்.

முந்தைய அமைப்பில் பூரட்டாதியில் அமாவாசை வருவதைப் பற்றிச் சொன்னோம். அதற்கு அடுத்த அமாவாசையில், சூரியன், உத்திரட்டாதி, ரேவதியைக் கடந்து, அஸ்வினிக்கு வந்து விடுவான். அதாவது மேஷத்தில் நுழைந்து சித்திரை மாதம் ஆரம்பித்து விடும். ஆனால் வளர்பிறை நவமி என்று வரும்? அஸ்வினிக்கு அடுத்த பரணியில் பிரதமை வந்து, ஆறாவது திதியான சஷ்டி திதியில் புனர்வசு இணையும். இந்த வருடம், சஷ்டியின் இரவில் புனர்வசு ஆரம்பித்து, சப்தமியில் முடிகிறது. இந்த வருடம் மீன ராசியில் உள்ள ரேவதியில் அமாவாசை வரவே, சைத்ர மாதம் அஸ்வினியில் ஆரம்பித்து, சஷ்டி–சப்தமியில் புனர்வசுவுடன் கூடுகிறது. அதற்குள் சூரியனும் மேஷத்தில் நுழைந்து விடுகிறது.

சூரியன் மேஷத்தில் இருந்தால், திதி– நக்ஷத்திரம் கூடவே முடியாது. சூரியன் மீனத்தில் இருந்தால், திதி– நக்ஷத்திரம் கூடுகிறது. ஆனால் இராமர் பிறந்த நேரத்தில் இருந்ததைப் போல சூரியன் மேஷத்தில் இருக்காது. நிலைமை இவ்வாறு இருக்கையில், இராமன் பிறந்தபொழுதுமட்டும் எப்படி மேஷ சூரியனும், திதி– நக்ஷத்திரமும் இணைந்தது?

அடுத்து ஒரே ஒரு சாத்தியம் இருக்கிறது. அது சைத்ர மாதத்தில் அதிக மாதம் வந்தால், அதை அடுத்து வரும் நிஜ மாதத்தில் இந்த இணைப்பு நெருக்கமாக வருகிறது. சூரியன் ரேவதியின் 29–



http://acharya.org

ஆவது பாகையில் இருக்கும் போது அமாவசை வந்தால், இரு தினங்களில் சூரியன் மேஷத்திற்கு வந்து விடுகிறான். ஆனால் நவமிக்குப் பதிலாக, அஷ்டமியில் புனர்வசு இணைகிறது.

ஜோதிடக் கணினியில் இந்த அமைப்புகளைத் தேடும் பொழுது, வால்மீகி சொல்லும் ஐந்து கிரக உச்ச அமைப்புகள் ஏற்படும் நேரத்தில், சைத்ர மாதம் நிஜ மாதமாக இருக்கிறது. சூரியன் மேஷத்துக்குள் வந்து விடுகிறான். ஆனால் புனர்வசு வளர்பிறை அஷ்டமியில் இணைகிறான். நவமியில் அல்ல. இதன் காலம் கி.மு. 5114 என்பதாகும்.

ஒரு குறிப்பிட்ட கிரக சேர்க்கை, இராசி மணடலத்தின் ஒரு குறிப்பிட்ட இடத்தில் அமைவது, 4,32,000 வருடங்களுக்கு ஒரு முறைதான் வரும். அப்படிப்பட்ட கிரக அமைப்புகளைக் கணினி காட்டுகிறது. கி.மு. 5114 ஆம் வருடம், நிஜ சைத்ர மாதத்தில், சூரியன், குரு, செவ்வாய், சனி, சுக்கிரன் ஆகிய ஐந்து கிரகங்கள் உச்சம் அடைவதையும், அவற்றுள் குரு, சந்திரனுடன் அபிஜித் முஹுர்தமான உச்சிக் காலத்தில் கடக லக்னத்தில் சேருவதையும், அப்பொழுது புனர்வசு நான்காம் பாதத்தில் இருப்பதையும் கணினி காட்டுகிறது. அது பராபவ வருடத்தில் ஒரு திங்கட் கிழமை. ஆனால் ஒத்துப் போகாத ஒரே ஒரு விவரம், திதி மட்டுமே. வளர்பிறை நவமி என்பதற்குப் பதிலாக, வளர்பிறை அஷ்டமி என்று காட்டுகிறது. அதாவது ஒரு திதி குறைவாகக் காட்டுகிறது.

இதன் காரணத்தை ஆராயும் போது, இன்றைக்கு உள்ள திதி– நக்ஷத்திரத் தொடர்பு தான் கணினியில் பின்னோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. இன்றைய காலக் கட்டத்தில் ஏன் இந்த தொடர்பு ஏற்படவில்லை? இதற்கு பதில், மஹாபாரதத்தில் இருக்கிறது.

### *மஹாபாரதத்தில் ஒரு திதி இழப்பு*

மஹாபாரதப் போருக்கு முன்னால் கிருஷ்ணர் தூது சென்றார். அந்தத் தூதை துரியோதனன் அலட்சியம் செய்துவிடுகிறான். அத்துடன், உடனடியாக, பீஷ்மரைத் தனது படைத் தளபதியாக நியமிக்க ஏற்பாடுகள் செய்கிறான். அது கார்த்திகை மாதத்து புஷ்ய நக்ஷத்திர தினமாகும். அன்றைய மாலைப் பொழுதில் எல்லா சடங்குகளும் முடியும் தருணத்தில், பல துர் நிமித்தங்கள் தென்பட ஆரம்பித்தன. வியாசர் மொத்தம் எழுபத்தைந்துக்கும் மேற்பட்ட துர் நிமித்தங்களை, பேரரசர் திருதராஷ்டிரரிடம் கூறுவார். அவற்றுள் முக்கியமனது, ஒரு வால் நக்ஷத்திரம், புஷ்ய நக்ஷத்திரத்தன்று விழுந்தது என்பதே.

‘‘தூமகேது மஹாகோர புஷ்யம் ஆக்ரம்ய திஷ்டதி’’ (மஹா.பா: 6–3–12) என்பார். அதே சமயம் கர்ணனும் சில நுட்பமான மாறுதல்களை கிருஷ்ணரிடம் சொல்பவான். அவற்றுள் முக்கியமானது, சந்திரனில் காணப்படும் புள்ளிகள் இடம் மாறி விட்டன (மஹா. பா: 5–141–10) என்பதும், கரணம் மாறி விட்டது என்பதும் ஆகும் (மஹா.பா: 5–141–9). இவற்றுள் சந்திரனில் புள்ளிகள் மாறின விவரத்தை வியாஸரும் கூறுவார் (மஹா.பா: 6–2–32). கரணம் மாறின விவரத்தை வேறு விதமாக வியாசர் சொல்வார் (மஹா.பா: 6–3–11). கரணம் என்பது திதியில் பாதி. அதாவது ஒரு திதியில் இரண்டு கரணங்கள் வரும், அவை திடீரென்று முன்னேறி விட்டன.

தூமகேது விழுந்த புஷ்ய தினத்தின் இரவில் தேய்பிறை சஷ்டி, சப்தமியாக அளவு குறுகி இருப்பதை அவர்கள் கண்டார்கள். அதன் தொடர்பாக, அந்த பக்ஷத்தின் முடிவில் வந்த அமாவாசை, திரயோதசி திதியன்றே வந்து விட்டது. இதை ஒரு கதை ரூபத்தில் தமிழ் மக்கள் அறிவார்கள்.

ஜோதிடத்தில் சிறந்த சஹாதேவனிடம் துரியோதனன் தான் போர் தொடங்க நல்ல நாள் கேட்டதாகவும், சஹாதேவன் அமாவாசை அன்று ஆரம்பிக்கும்படி சொன்னான் என்பார்கள். அதைக் கேட்ட மற்ற பாண்டவ சகோதரர்கள், இதனால் தாங்கள் வெற்றி பெற இயலாமல் போய் விடுமே அன்று அஞ்சி, கிருஷ்ணனை அணுகினார்கள். கிருஷ்ணன் தான் பார்த்துக் கொள்வதாகச் சொல்லி, அமாவாசை வருவதற்கு முன்னாலேயே தர்பணம் செய்ய ஆரம்பித்து விடுவார். அதைப் பார்த்து



http://acharya.org

எல்லோரும் அதிர்ந்து போக, சூரிய, சந்திரர்களும், கிருஷ்ணனை நாடி வந்து அமாவாசை வருவதற்குள் ஏன் தர்பணம் செய்கிறீர்கள் என்று கேட்டார்கள். அதற்கு, அமாவாசை என்றால் என்ன என்று கிருஷ்ணர் கேட்க, சூரியனும், சந்திரனும் ஒன்றிணைவது என்று அவர்கள் பதில் தர, நீங்கள் இங்கே ஒன்றிணைந்து விட்டீர்களே, இன்றுதானே அமாவாசை என்று கிருஷ்ணன் சொல்வதாகக் கதை வரும்.

இந்தக் கதை, இயற்கையில் என்று ஏற்பட்ட ஒரு உத்பாதத்தை என்றும் மறக்காமல் வைத்திருக்க உருவாக்கப்பட்டது. கிருஷ்ணர் தர்பணம் செய்திருக்க முடியாது, ஏனெனில் அவரது தந்தை, கிருஷ்ணரது காலம் வரை இருந்தார். ஒரு திதி தப்பி அமாவாசை முன்னாலேயே வந்து விடவே, அதுவரை இருந்த திதி– நக்ஷத்திர அமைப்பு பிறழ்ந்தது. அவ்வபொழுது அமாவாசை முன்னதாகவே வந்து விடவே போதாயன அமாவாசை என்பதைக் கொண்டு வந்தார்கள். இந்தத் திதி இழப்பினால், அந்த முறை உத்தராயணமும் காலம் தப்பி வந்தது. அதன் காரணமாக பீஷ்மரும் தனது முடிவுக் காலத்தைத் தள்ளிப் போட வேண்டியதாயிற்று. அதனால்தான் அந்த உத்தராயணத்தை 'ரத சப்தமி' என்று இன்றும் நினைவு கூர்கிறோம்.

இதன் முக்கிய விளைவாக, நாம் இன்றிலிருந்து பின்னோக்கிக் கணக்கிடும் போது, அந்த கார்த்திகை புஷ்யத்துக்கு முன் வந்த காலத்தில், ஒரு திதி குறைவாக இருக்கிறது. அப்பொழுது பிறந்த கிருஷ்ணரது பிறந்த தினத்தையும், சூரியன், திதி, நக்ஷத்திரம் என ஒரே காலக் கட்டத்தில் பார்க்க முடிவதில்லை. இராமரது பிறந்த தினத்தையும், சூரியன், திதி, நக்ஷத்திரம் ஆகியவற்றின் சேர்க்கையுடன் பார்க்க முடிவதில்லை.

கணினி காட்டும் இராமர் காலத்தின் எல்லா நாட்களிலும், ஒரு திதி குறைவாக இருக்கும். நாமாக ஒரு திதியைக் கூட்டிக் கொள்ள வேண்டும். அப்படிச் செய்தால்தான் கிரகங்களே ஒருங்கிணைந்த வருடமான கி.மு. 5114 இல் புனர்வசுவுடன் அஷ்டமி இணையவே, ஒரு திதியைக் கூட்டி நவமி என்று எடுத்துக் கொள்ள வேண்டி இருக்கிறது.

ஸ்ரீரங்கம் கோயிலைப் பொறுத்தவரை, நவமிக்கும், மேஷ சூரியனுக்கும் முக்கியத்துவம் கொடுத்து மேஷ மாத வளர்பிறை நவமியில் கொண்டாடுவது வழக்கமாக இருக்கிறது. இப்பொழுது அயோத்தியாவில் புனர் நிர்மாணம் செய்துள்ள இராமர் கோயிலில், ஸ்ரீராமநவமியன்று பகவான் நெற்றியில் சூரிய ஒளி விழுமாறு செய்திருக்கிறார்களாம். எந்த ஸ்ரீராமநவமி அது?

எது எப்படி இருப்பினும், இராமர் பிறந்த தினம் என்று உலகத்தாருக்கு நாம் காட்ட வேண்டி இருக்கிறது. இல்லையேல் இராமாயணமே கட்டுக் கதை என்று சொல்ல பலரும் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படி நமக்குக் கிடைக்கும் காலண்டர் தேதி ஜனவரி 9, கி.மு. 5114 ஆகும். ஜனவரியாக வருவதற்குக் காரணம், ஆங்கில காலண்டர் தேதி, நக்ஷத்திரத்துடன் இணைக்கப் படுவதில்லை. நம்முடைய காலக் கணிப்பில்தான், நக்ஷத்திரத்தைப் பொறுத்து வருஷம் பிறக்கிறது. ஆனால் காலண்டர் கணக்கில் சூரியன் பின்னோக்கி நகர்ந்து கொண்டிருக்கவே, முடிந்து விட்ட காலத்தில் காலண்டர் தேதி பின்னோக்கியும், வரப்போகும் காலத்தில் முன்னோக்கியும் செல்லும்.

உதாரணமாக, வருஷப் பிறப்பு 60 வருடங்களுக்கு முன்னால் ஏப்ரல் 13 ஆம் தேதி வந்தது. இப்பொழுது 14 அல்லது 15 ஆம் தேதி வருகிறது. இன்னும் 100 வருடங்களில் 16 அல்லது 17 ஆம் தேதி வரும். எனவே ராமர் வாழந்த காலத்தில் சித்திரை மாதம் ஜனவரியில் எவ்வாறு வந்தது என்று குழப்பிக் கொள்ள வேண்டாம்.

வருடந்தோறும் கொண்டாடும் ஸ்ரீராம நவமியில், திதியும், நக்ஷத்திரமும் சேராமை, மஹாபாரத காலத்தில் நடந்த ஒரு விண்வெளி விவரம் என்பதை, நம் சமூகம் மட்டும்தான் புரிந்து கொண்டிருக்கிறது. அறிவியல் உலகுக்கு என்றுதான் தெரிய வருமோ?



http://acharya.org

# ஸ்ரீராமாயணமும் திருப்பாவையும்

T.C.A. வெங்கடேசன்

### 2.1 துயின்ற பரமன் அடி பாடி

"பாற்கடலுள் பையத் துயின்ற பரமன் அடி பாடி" என்னும் சொற்றொடர் நம்முடைய அநுபவத்திற்கு உரித்தாகிறது

முதற்பாட்டிலே பரவாஸுதேவனான நாராயணனைச் சொன்னாள் ஆண்டாள். இப்பாட்டிலே வ்யூஹவாஸுதேவனான க்ஷீராப்தி நாதனைச் சொல்லுகிறாள்.

திருப்பாற்கடலுள் திருவநந்தாழ்வான் ஆகிற மெத்தையின் மேல் கிடந்து ஜகத்தை ரக்ஷிக்கும் சிந்தையிலே யோக நித்திரை கொண்ட பெருமான் திருவடிகளுக்கு மங்களாசாஸனம் பண்ண வேண்டும் என்று இத்தால் சொல்லப்படுகிறது.

நோன்பு நோற்கிறவர்கள் அதைத் தடையின்றி நிறைவேற்றித் தலைக்கட்ட வேண்டும் என்பதற்காக சில விஷயங்களை செய்வோம் என ஏற்றுக் கொண்டும் சிலவற்றைச் செய்யோம் என விலக்கவும் வேண்டும். அதை நோன்பிற்கு முன் ஸங்கல்பம் செய்து கொள்ள வேண்டும் என்று சாஸ்த்ரங்களில் சொன்னபடி, பற்ற வேண்டியவற்றையும் விட வேண்டியவற்றையும் இப்பாட்டில் கூறுகிறார்கள் ஆயர் சிறுமியர்கள்.

பாற்கடலுள் பையத் துயின்ற பரமன் அடி பாடுவதும், நாட்காலே நீராடுவதும், ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டுவதும் செய்ய வேண்டியவை. நெய் உண்கை, பால் உண்கை, மை இட்டு எழுதுகை, செய்யாதன செய்கை, தீக்குறளை சென்று ஓதுகை ஆகியவை விட வேண்டியவை.

அதிலே செய்ய வேண்டிய ஒன்றானது எம்பெருமானுடைய திருவடிகளுக்குப் பல்லாண்டு பாடுகையாம்.

திருவோலக்கத்தில் ஸாம காநம் கேட்கும் பரமபதத்தை விட்டும் இறங்கி வந்து அடியவர்களின் முறையீடுகளைச் செவிமடுக்கும் இடமாகிறது திருப்பாற்கடல் என்னும் திவ்யதேசம். "கால்நடை தந்து போக வல்ல ப்ரஹ்மருத்ராதிகளுக்காகத் திருப்பாற்கடலிலே வந்து சாய்ந்தபடி" என்கிறார் ஈட்டிலே நம்பிள்ளை. அங்கே ஜகத்ரக்ஷண சிந்தையிலே ஆதிசேஷன் மீது 'உறங்குவான் போல் யோகு செய்தவன்' எம்பெருமான். தமோ குணத்தால் வந்த உறக்கமன்றிது. "கண்வளருகை என்று ஒருபேராய், ஜகத்ரக்ஷணோபாய சிந்தை பண்ணுகிற ஸர்வேச்வரனை" என்பர் பெரியவாச்சான்பிள்ளை.

அப்படி ஒரு நோக்கத்துடன் அடியார் குரல் கேட்டு அசங்காதே 'மெள்ளத் துயின்றான்' என்று இருந்ததால் பையத் துயின்ற எனப்படுகிறது. பிராட்டிமாரோடு அநுபவிக்கும் போகத்திற்கும் இடம் கொடுக்காமல் இவ்வுலகத்தவருடைய நோவை ஒரு கோவையாகச் சிந்தித்துக் கொண்டு சாய்ந்திருக்கும் நிலையாம்.

திருப்பாற்கடலில் கண்வளருகிறவனைப் பரமன் என்னலாமோ என்ன, ஒரு தங்கத் தட்டிலே மாணிக்கத்தைப் பதித்தாற்போல் திருவநந்தாழ்வான் மேல் கிடக்கையால் வந்த நிறத்தையும் அழகையும் கொண்டு இவனே பரமபுருஷன் என்று அறுதியிடும்படியாய் இருக்கிறது.



http://acharya.org

அன்றிக்கே, அடியாரைக் காப்பதன் பொருட்டு இங்கு வந்த குணத்தின் மேன்மையைப் பற்றி என்னவுமாம்.

ஸர்வத்துக்கும் அதிகனான அவனுடைய மேன்மையின் எல்லையைப் பார்த்த அளவில் தங்கள் தாழ்ச்சியின் எல்லை நினைவுக்கு வரும் ஆதலால், அவனை ஏத்துகையே நிற்கும் என்பதால் அவன் திருவடியைப் பாடுகின்றனர். க்ருஷ்ணன் திருவடிகள் என்னாமல் பரமன் திருவடிகள் என்றது

ஏஷ நாராயண ஸ்ரீமாந் க்ஷீரார்ணவ நிகேதந:

நாகபர்யங்கம் உத்ஸ்ருஜ்ய ஹ்யாகதோ மதுராம்புரீம்

என்றபடி, அப்பரமன் தானே மதுரைக்கும் ஆய்ப்பாடிக்கும் இறங்கி வந்தவன் ஆகையாலே, இருவரும் ஒருவரே என்ற காரணத்தினால். அன்றிக்கே, நோன்பு நோற்க முற்பட்டவர்கள் க்ருஷ்ணனைப் பாடினார்கள் என்று பிறர் சொல்லாமல் இருப்பதற்காக ஒரு தெய்வத்தின் பெயரைச் சொன்னார்கள் என்றும் கொள்ளலாம். கண்ணபிரானுக்கும் இவர்களுக்கும் உள்ள சேர்த்தியைப் பற்றிய ஐயத்துடன் இருக்கும் இடையர்கள் இதற்கு இடையூறு செய்வார்களோ என்ற அச்சத்தினால் என்னவுமாம்.

மஹரிஷிகள் ஏனையோர்கள் என்ற வேறுபாடு இல்லாமல் அடிமை நிலை எல்லோருக்கும் பொதுவாய் இருக்கிறது.

தேவாநாம் தாநவாநாம் ச ஸாமாந்யம் அதிதைவதம்

ஸர்வதா சரண த்வந்த்வம் வ்ரஜாமி சரணம் தவ

என்றதிறே ஜிதந்தே ஸ்தோத்ரமும். எனவே அவன் திருவடிகளுக்குப் பல்லாண்டு பாடுகிறார்கள்.

திருவடிகளைச் சொன்னது திருமேனிக்கு உபலக்ஷணமாய் அவன் வடிவழகைச் சொல்லுகிறது. "இத்தால், பிராட்டிக்கு இருப்பிடமாய், குணப்ரகாசகமுமாய், சிசுபாலனையும் அகப்படத் திருத்திச் சேர்த்துக் கொள்ளும் திருமேனியை நினைக்கிறது" என்றார் பிள்ளை லோகாசார்யரும்.

அதில் ஈடுபட்டு பாடுகிறார்கள். "அவன் உறக்கம் புருஷோத்தமத்வத்துக்கு ஸூசகம் ஆனாப் போலே, இவர்களும் நாரீணாமுத்தமைகள் ஆனமைக்கு ஸூசகம் திருவடிகளைப் பாடுகை" என்கிறார் அழகிய மணவாளப் பெருமாள் நாயனார்.

### 2.2 ஸ்ரீராமாயண காட்சி 1

பல காலம் வாழ்ந்தும் அயோத்யா ராஜ்யத்தை நன்கு பரிபாலனம் செய்தும் இருந்த தசரத சக்ரவர்த்தி, வயோதிகம் காரணமாக தன் திருமகனான ஸ்ரீராமனுக்கு முடி சூட எண்ணி அதைத் தன் அவையோருக்கும் அறிவித்தான் – "புஷ்ய நக்ஷத்ரத்துடன் சேர்ந்த சந்திரனைப் போல ப்ரகாசிப்பவனும், தர்மத்தைக் காப்பவர்களில் ஏற்றம் படைத்தவனும், மனிதர்களுக்குள் உயர்ந்தவனுமான ஸ்ரீராமனை ஆநந்தத்துடன் யுவராஜனாக ஆக்குகிறேன்":

தம் சந்த்ரமிவ புஷ்யேண யுக்தம் தர்மப்ருதாம் வரம்

யௌவராஜ்யே நியோக்தாஸ்மி ப்ரீத: புருஷபுங்கவம்

அதைக் கேட்ட அயோத்யாவாசிகள் அதுவே தங்களுக்கும் வேண்டியது என்பதை ஒருமித்தாகக் கூறினார்கள்: "ஓ! அரசனே. உனக்கு வயதாகி விட்டது. நாங்கள் அனைவரும் நீண்ட கரங்கள் கொண்டவனும், ரகுவீர திலகனும், பெரும் பலத்தை உடையவனுமான ஸ்ரீராமனை அம்பாரி கொண்ட யானையின் மீது காண ஆசைப்படுகிறோம்"



http://acharya.org

அநேக வர்ஷ ஸாஹஸ்ராணி வ்ருத்தஸ்த்வமஸி பார்திவ
இச்சாமோ ஹி மஹாபாஹூம் ரகுவீரம் மஹாபலம்
கஜேந மஹதா யாந்தம் ராமம் சத்ராவ்ருதாநநம்

வஸிஷ்ட வாமதேவர்களை அழைத்து யுவராஜ பட்டாபிஷேகத்திற்கான ஏற்பாடுகளைச் செய்யச் சொன்ன மன்னவன், பின் பெருமாளை அழைத்து அவருக்கும் தன் கருத்தைச் சொல்லி மறு நாளே அது நடக்க வேண்டும் என்றான். தந்தை சொல் தட்டாத தனயனும் அதை ஏற்றுக் கொண்டு பட்டாபிஷேகத்திற்காக பிராட்டியுடன் நாராயணனை வழிபட்டான் என்கிறார் மஹரிஷி.

வஸிஷ்டர் பட்டாபிஷேக சடங்குகளை விளக்கி விட்டுச் சென்ற பின், முதலில் ஸ்நாநம் செய்தான்; பிறகு விசாலமான மலர்ந்த திருக்கண்களை உடையவளான ஸீதா பிராட்டியோடு நாராயணனை இடைவிடாது மனதிலே த்யானித்தான் என்கிறார்:

கதே புரோஹிதே ராம: ஸ்நாதோ நியதமாநஸ:
ஸஹ பத்ந்யா விசாலாக்ஷ்யா நாராயணமுபாகமத்

மேலும் நெய்க்குடத்தைத் தன் திருமுடியில் தாங்கி அதிலிருந்து நெய்யை அக்னியிலே சேர்த்துப் பெரியவனான எம்பெருமானுக்குச் சமர்ப்பித்தான்:

ப்ரக்ருஹ்ய சிரஸா பாத்ரம் ஹவிஷோ விதிவத்ததா
மஹதே தைவதாயாஜ்யம் ஜுஹாவ ஜ்வலிதாநலே

இப்படி அவன் வழிபட்ட எம்பெருமான் யார் என்பது, 'பின்னானார் வணங்கும் சோதியாய்' இன்றளவும் திருவரங்கத்திலே திருவநந்தாழ்வான் மேல் சயனித்திருக்கும் ஸ்ரீரங்கநாதனே என்பது ஸ்ரீரங்க மாஹாத்ம்யத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இஷ்வாகு குல தனமாய் பல அயோத்தி மன்னர்களால் வழிபடப்பட்டு வந்த அவர், ராவண வதத்திற்கு பிறகு ஸ்ரீராமனால் விபீஷணாழ்வானுக்கு கொடுக்கப்பட்டு, அவன் அவரை லங்கைக்கு எழுந்தருளப் பண்ணிக் கொண்டு போகும் போது, உபய காவேரி மத்யத்திலே ஸ்ரீரங்கத்திலே தங்கி இன்றளவும் 'தென் திசை இலங்கை நோக்கி' கிடக்கிறார் என்பது பாத்ம புராணத்தில் காட்டப்பட்டுள்ளது.

கீழே சொன்ன ச்லோகத்திலும் மஹரிஷியானவர், பெருமாள் வழிபட்டது பெரிய பெருமாளான ஸ்ரீரங்கநாதனைத் தான் என்பதை 'மஹதே தைவதாய' என்று உணர்த்தினார்.

இப்படித் தானே தன்னை வழிபடலாமா என்றால் "சிஷ்யன் இருக்கும் இருப்பு நாட்டார் அறியாமையாலே அத்தை அறிவிக்கைக்காக" என்றபடி தானே நரனும் நாராயணனுமாக வந்ததைப் போல், திருவாராதநம் செய்வது எப்படி என்று நாட்டார் அறியாமையாலே அதைத் தானே செய்து காட்டினான் என்று பெரியோர் பணிப்பர்.

ஆக, பையத் துயின்ற பரமனான பெரிய பெருமாளை, பெருமாளான ஸ்ரீராமனே பாடித் தொழுதான் என்று ஸ்ரீராமாயணத்தில் காண்கிறது.

### 2.3 *ஸ்ரீராமாயண காட்சி 2*

அயோத்யா காண்டத்தில் நடந்த ஓர் நிகழ்ச்சியை ஸுந்தர காண்டத்திலே திருவடிக்கு ஸீதா பிராட்டி தான் பெருமாளுக்குக் கூறும் குறிப்பாகச் சொல்லுகிறாள்.

வளநகரைத் துறந்து காட்டிற்குச் சென்ற பெருமாள் சித்திரகூட மலைக்கருகே பிராட்டியோடும் இளையவனோடும் இருக்கிறார். அங்குள்ள மந்தாகினி நதியின் அழகையும் அதனருகில் உள்ள பல வண்ண கரைகளையும், அதில் நீந்தும் பறவைகளையும், அதில் உள்ள புஷ்பங்களையும் பிராட்டிக்குக் காட்டுகிறார் பெருமாள்:



http://acharya.org

விசித்ர புலிநாம் ரம்யாம் ஹம்ஸ ஸாரஸ ஸேவிதாம்

குஸுமைர் உபஸம்பந்நாம் பச்ய மந்தாகிநீம் நதீம்

அதிலே தாங்கள் இருவரும் குடைந்தாட வேண்டும் என்றும் கூறுகிறார் அவர்:

விகாஹஸ்வ மயா ஸஹ – அப்படி அவர்கள் குடைந்தாடியது அங்கே சொல்லப்படவில்லை. அதை ஸுந்தர காண்டத்திலே அநுமனுக்கு விவரிக்கிறாள் பிராட்டி.

இருவரும் அதில் நனைந்த பிறகு அருகருகே அமர்ந்தார்கள்:

விஹ்ருத்ய ஸலில க்லிந்நா தவ அந்கே ஸமுபாவிசம்

பர்யாயேண ப்ரஸுப்த: ச மம அந்கே பரதாக்ரஜ:

பிறகு இருவரும் உறங்கி இருக்கும் போது, காகாஸுரன் ஆனவன் பிராட்டியின் ஸ்தநத்தை தன்னுடைய அலகினால் குத்த அதனால் உதிரம் பெருகி உறங்கிக் கிடந்த பெருமாள் மேல் விழுந்தது: – ''தத: ஸமுக்ஷிதோ ராமோ முக்தை: சோணித பிந்துபி:''

அப்படி சுகமாகத் திருப்பள்ளி கொண்டிருக்கும் (ஸுக ஸுப்த:) பெருமாளைப் பற்றி சொல்லும் பிராட்டி, அவனை ஸ்ரீமாந் என்றும் பரந்தப: என்றும் சொல்லுகிறாள். உறங்கிக் கொண்டிருக்கும் போதும் திகழும் அவனுடைய அழகுக்கும் வீரத்துக்கும் இவ்வாறு மங்களாசாஸநம் செய்கிறாள்:

ஸ மயா போதித: ஸ்ரீமாந் ஸுகஸுப்த: பரந்தப:

இங்கே ஸ: என்பது அவன் அழகின் ப்ரஸித்தியைக் காட்டுகிறது என்றும், ஸ்ரீமாந் என்பது கண்வளர்ந்தருளுகிறபோதை காந்திப்ராசுர்யம் என்றும் உரைக்கிறார் அழகிய மணவாளப் பெருமாள் நாயனார்.

பைய துயின்ற ஸ்ரீராமனான பரமனைப் பாடுகிறாள் ஸ்ரீதேவியான ஸீதா பிராட்டி என்று இங்கே காண்கிறோம்.


Statement about ownership and other particulars about
**GEETACHARYAN**
Registration No. R.N. 33614/78
Form IV (See Rule8)

| | |
|---|---|
| 1. Place of Publication | : Chennai |
| 2. Periodicity | : Monthly |
| 3. Printer's Name | : G. Rajan |
| Nationality | : Indian |
| Address | : RNR Printers & Publishers 9,Thandavarayan St., Triplicane, Chennai 5 |
| 4. Puhlisher's Name | ; M.A.Venkatakrishnan |
| Nationality | : Indian |
| Address | : 7, South Mada Street, Triplicane, Chennai 5 |
| 5. Editor's Name | : M.A.Venkatakrishnan |
| Nationality | : Indian |
| Address | : 7, South Mada Street, Triplicane, Chennai 5 |
| 6. Name & Address of the individuals who own the news paper and partners or share holders hold -ing more than one percent on the total | : M.A.Venkatakrishnan 7, South Mada Street, Triplicane, Chennai 600 005 |

I, M.A.Venkatakrishnan, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Chennai Sd/-
15/3/2024 M.A. Venkatakrishnan


**கீதாசார்யன்** பத்திரிகைக்குத் செலுத்தியுள்ள சந்தா முடிவடைந்த உடன், சந்தா முடிவடைவது பற்றித் தனித் தபாலில் தெரிவிக்கப்படும். உடனடியாகச் சந்தா செலுத்திப் புதுப்பித்துக் கொள்ளாதவர்களுக்கு அடுத்த இதழ் அனுப்பப்படமாட்டாது. சந்தா செலுத்துபவர்கள் பின்கண்ட வங்கியின் (எந்த ஊரிலும்) எந்தக் கிளையிலும் கீதாசார்யன் சந்தா செலுத்தலாம்:

**Account in the Name of GEETHACHARYAN TRUST**


**Punjab National Bank A/c No. 0346000100121239 IFSC: PUNB0034600**

மேற்கண்ட வங்கிகளில் சந்தா செலுத்திய விவரத்தை, கீதாசார்யன் அலுவலகத்திற்குத் தொலைபேசி மூலமாகவோ, SMS, Whatsup, கடிதம், geethacharyan@yahoo.com க்கு E-mail மூலமாகவோ தெரிவிக்க வேண்டும். தொலைபேசி எண் : **9444911192** (காலை 11 மணிமுதல் மாலை 4 மணி வரை மட்டும். ஞாயிற்றுக் கிழமை விடுமுறை.) மணியார்டர்/டி.டி./ உள்ளூர் காசோலைகள் மூலமும் சந்தா செலுத்தலாம்.





http://acharya.org

श्रीः



Srimathe Ramanujaya Namaha



Srinivasaya Mangalam



Sri Varavara Munaye Namaha

**SRI BHAGAWAT RAMANUJA SIDDANTHA PRACHAR SABHA (Regd.)**

(301. RNA Park View. Road No. 4. CHEMBUR. MUMBAI – 400071) CONTACT NOS. 9869441127 / 9821013274

# RAMANUJA DASOHAM

# ஸ்ரீராமாநுஜ தாஸோஹம்



http://acharya.org

# ஸ்ரீபகவத்ராமாநுஜ ஸித்தாந்த ப்ரசார ஸபா (பதிவு)

(Regn No.: 798 dated 23.05.2003under Societies Regn. Act, 1860 & FR-25901dated 16.10.2003 under Bombay Public Trust Act 1950)

Regd. Off.: 301, RNA Park View, Road No. 4, Opp. Gandhi Maidan, Chembur, Mumbai-400071. Mob.:98210 13274

Portal: https://www.mumbairamanujasabha.org

போஷகர்கள்

**ஸ்ரீமத் பரமஹம்ஸ மதுரகவி வானமாமலை ராமாநுஜ ஜீயர் ஸ்வாமி**
**ஸ்ரீமத் பரமஹம்ஸ திருமலை திருப்பதி பெரிய கோயில்கேள்வி அப்பன் ஜீயர் ஸ்வாமி**

Managing Committee

நிர்வாஹக் குழு

*தலைவர்*

Sri P, ஸுந்தரராஜன்

| துணைத் தலைவர் | செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|
| Sri S. ராமானுஜம் | Sri P.V. குலசேகர் | Sri P . ஸ்ரீனிவாஸன் |

அங்கத்தினர்கள்

| | | | |
|---|---|---|---|
| Sri R ராகவன் | Sri S சேஷாத்ரி (Mulund) | Sri K S ரவி | Sri S ரகுநாதன் |
| Sri S ரமேஷ் | Sri P திருவேங்கடம் | Sri S ராகவன் | Sri A P கண்ணன் |
| Sri P S ராமானுநும் | Sri M P கோவிந்தராஜன் | Sri V சுரேஷ் குமார் | Sri R ராமசந்த்ரன் |
| Sri (Dr) K ரகுராமன் | Sri S விஜயராகவன் | Sri R சுந்தரராஜன் | Sri சந்தானம் சாரி |
| Sri பாலாஜி கண்ணன் | | | |

கௌரவ ஆலோசகர்கள்

| | | |
|---|---|---|
| Sri S பட்டாபிராமன் | Sri S சடகோபன் | Sri R G ராஜன் |

தணிக்கையாளர்

Sri C ராஜகோபாலன்

OUR MOTTO : SERVICE TO HUMANITY IS SERVICE TO GOD

ALL ARE WELCOME TO JOIN SRI RAMANUJA FAMILY

**சபை அங்கத்தினர் கட்டண விவரம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | Life Membership | Rs. 1010/- | (One time payment) |
| 2. | Patron Family Membership | Rs. 15010/- | (One time payment) |

Our Bank details For payment of Membership Fee or any Donation :

State Bank of India, Chembur Branch, Mumbai – 400071

A/c Name: "SRI BHAGAWAT RAMANUJA SIDDANTHA PRACHAR SABHA"

SB A/c No.: 10339724389 – IFSC : SBIN 0000533

---

Email: mumbairamanujasabha@gmail.com

website: https://www.mumbairamanujasabha.org

Facebook: https://www.facebook.com/ramanujasabha.mumbai.5

Youtube: https://www.youtube.com/channel/UCjK5Kx25iy5U8vUH0Jzn0Gw



http://acharya.org

# ஸ்ரீராமானுஜதாஸ ஆஸ்திக பந்துக்களே!

எல்லோருக்கும் நமஸ்காரம். கடந்த 30 மாதங்களாக, நமது சபா அங்கத்தினர்கள் அனைவருக்கும் ''கீதாசார்யன்'' மாதப்பத்திரிகை படிக்கும் பாக்கியம் கிட்டியது. கிட்டத்தட்ட 50 வருடங்களாக ஸ்ரீ உ.வே. (டாக்டர்) ம.அ. வேங்கடகிருஷ்ணன் ஸ்வாமியால் நடத்தப்பட்டு வரும் இந்தப் பத்திரிகையில், நமது ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாய ஸம்பந்தமான பல விஷயங்களும் கட்டுரைகளும், நமது ஸம்ப்ரதாய பெரியோர்களின் அறிவுரைகளும் பிரசுரிக்கப்பட்டு வருகின்றன. இப்படிப்பட்ட பத்திரிகையில் நமது சபையும் பங்கெடுத்து, பல வைணவ மஹனீயர்களின் கட்டுரைகளை பிரசுரிக்கும் பாக்கியம் கிட்டியது. இதன் மூலம் நமது சபையைப்பற்றிய விஷயங்கள் நமது அங்கத்தினர்கள் அல்லாத பலருக்கும் எட்டியதும் நமது சபைக்குக் கிட்டிய லாபம் என்று கொள்ள வேண்டும்.

இந்த ''கீதாசார்யன்'' ஏற்பாடு இன்னும் தொடர வேண்டும் என்ற அவா எல்லோருக்கும இருந்தாலும், நமது சபையின் நிதி நிலைமை போதுமானதாக இல்லாததாலும், நாம் எதிர்பார்த்த அளவு நமது அங்கத்தினர்களின் உதவி (sponsorship support) கிடைக்காததாலும் குரோதி ஆண்டு சித்திரை மாதம் முதல் கீதாசார்யனில் நமது ''ராமாநுஜ தாஸோஹம்'' பிரசுரிப்பதை நிறுத்திவிட முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த முடிவு மிக வருத்தத்துடனே எடுக்கப்பட்டுள்ளது. இந்த ஏற்பாட்டிற்கு முன்னால் வந்து கொண்டிருந்தபடி நமது ராமானுஜ தாஸோஹம் சபாவின் ந்யூஸ்லெட்டர் (Newsletter) என்ற பெயரில் வருடத்திற்கு 3–4 இதழ்களாக வந்து கொண்டிருக்கும்.

இந்த 30 மாதங்களாக நமது ''ராமாநுஜ தாஸோஹம்'' பிரசுரிப்பதற்காக, நமக்குப் பேருதவி செய்த ஸ்ரீ உ.வே. வேங்கடகிருஷ்ணன் ஸ்வாமி அவர்களுக்கு நமது க்ருத்க்ஞதையை தெரிவித்துக்கொள்கிறோம். மாதாமாதம், நாம் கொடுத்த எல்லா கட்டுரைகள், விஷயங்களையும், தான் ஆசிரியர் என்ற முறையில், ஒரு முறை படித்து, அச்சுக்கு ஏற்றார்போல் கொடுத்து அவர் செய்த உதவிக்கு நம்மால் நன்றி சொல்ல வார்த்தைகளே கிடையாது. இதற்குப் பின்பும் அவருடன் ஏதாவது முறையில் சேர்ந்து கைங்கர்யம் செய்ய சந்தர்ப்பம் கிடைத்தால், அது நமக்கெல்லாம் பேரின்பம் அளிக்கும்.

சித்திரை முதல், நமது அங்கத்தினர்களுக்கு, கீதாசார்யன் இதழ் கிடைக்காது. நமது அங்கத்தினர்களுக்கு ஒரு தாழ்மையான வேண்டுகோள். கீதாசார்யன் தொடர்ந்து படிக்க விரும்பும் அனைத்து அங்கத்தினர்களும் கீதாசார்யன் பத்திரிகைக்குத் தனியாக சந்தா கட்டி பெற்றுக் கொள்ள வேண்டுகிறோம்.

ஸ்ரீ உ.வே. வேங்கடகிருஷ்ணன் ஸ்வாமியின் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாய கைங்கர்யம் தொடர்ந்து மேலும் மேலும் வளர, திருவல்லிகேணி கோவிலில் உள்ள அந்த கீதாசார்யனையே பிரார்த்தித்துக்கொள்கிறோம்.


**கீதாசார்யன்** 7, தெற்கு மாடவீதி, திருவல்லிக்கேணி, சென்னை 600005

**இரண்டு வருடச் சந்தா ரூ. 500**

சந்தா செலுத்துபவர்கள் பின்கண்ட வங்கியின் (எந்த ஊரிலும்) எந்தக் கிளையிலும் கீதாசார்யன் சந்தா செலுத்தலாம்:

**Account in the Name of GEETHACHARYAN TRUST**
**Punjab National Bank A/c No. 0346000100121239 IFSC: PUNB0034600**

மேற்கண்ட வங்கிகளில் சந்தா செலுத்திய விவரத்தை, கீதாசார்யன் அலுவலகத்திற்குத் தொலைபேசி மூலமாகவோ, SMS, Whatsup, geethacharyan@yahoo.com க்கு E-mail மூலமாகவோ தெரிவிக்க வேண்டும். தொலைபேசி எண் : **9444911192** (காலை 11 மணிமுதல் மாலை 4 மணி வரை மட்டும். ஞாயிற்றுக் கிழமை விடுமுறை.) மணியார்டர்/டி.டி./காசோலைகள் மூலமும் சந்தா செலுத்தலாம்.




http://acharya.org

# விசிஷ்டாத்வைத ஸித்தாந்த ஸாரம்

ஸ்ரீமதுபயவேதாந்த மஹாவித்வான் ப்ரதிவாதி பயங்கரம் காதி அநந்தாசார்ய ஸ்வாமியின் உபந்யாஸச் சுருக்கம்

1. சித்து, அசித்து, ஈச்வரன் என மூலப்பொருள்கள் மூன்று.

2. சித்து– என்று ஜீவாத்மாவுக்குப் பெயர். அசித்து என்பது பிரகிருதியை. இந்த பிரகிருதிக்கு 'மாயை', 'அவித்யை' என வேறு பெயர்களுமுண்டு.

3. இந்த மூன்று மூலப்பொருள்களும் ஸத்யமும் நித்யமுமாம்.

4. எல்லா ஜகத்தினுடையவும் ஜந்மம் (பிறப்பு), ஸ்திதி (இருப்பு) ஸம்ஹாரம் (நாசம்) இவற்றுக்குக் காரணம் ப்ரஹ்மம் என்னும் ஈச்வரனே.

5. ப்ரஹ்மமே ஜகத்தின் உபாதாநகாரணமும், நிமித்த காரணமுமாம். உலகில், ஒவ்வொரு காரியப் பொருளுக்கும் மூன்று காரணங்கள் உண்டு. (1) உபாதாநகாரணம்; (2) நிமித்தகாரணம் (3) ஸஹகாரிகாரணம். மண்ணினாலாகிய ஒரு பானைக்கு மண் உபாதாநகாரணம். குயவன் நிமித்தகாரணம், சக்கரம், தடி, ஜலம் முதலியன ஸஹகாரி காரணங்கள்.

6. ஜீவாத்மா, ப்ரகிருதி, ஈச்வரன் என்ற இம்மூன்று பொருள்களின் கூட்டே ஜகத்தாகும். இம் முக்கூட்டிற்கே ஜகத்தெனப் பெயராம்.

7. பரப்ரஹ்மத்தினிடம் கெட்ட குணங்கள் (ஹேயகுணங்கள்) ஒன்றுமேயில்லை. எல்லா நற்குணங்களும் (கல்யாணகுணங்கள்) அதனிடம் நிறைந்திருக்கின்றன.

8. பரப்ரஹ்மம் ஞான ஸ்வரூபியும், ஆனந்த ஸ்வரூபியுமாம். ஞானம், சக்தி, பலம், ஐச்வர்யம், வீர்யம், தேஜஸ் முதலிய அநந்தமான நற்குணங்கள் அதற்குண்டு. அது ஸர்வஜ்ஞம் (எல்லாமறிந்தது); ஸர்வசக்தி (எல்லாம் வல்லது); ஸர்வவ்யாபி (எங்கும் நிறைந்தது).

9. ஜீவாத்மா ஜ்நாநந்த ஸ்வரூபியும், ஞானமென்கிற தர்மத்தையுடையவனு (ஞானியு) மாம். ஜீவாத்மாக்கள் கணக்கில்லாதவை. அவற்றின் பரிமாணம் (அளவு) அணுவாம்.

10. ஜீவாத்மா அநாதியாய் அவித்யையென்று சொல்லப்படுகிற அஜ்ஞாநத்தினால் ஏற்பட்ட புண்ய பாபங்களாகிற கருமங் காரணமாக பிரகிருதி ஸம்பந்த (சரீர ஸம்பந்த) மாகிற ஸம்ஸாரத்தை அடைகிறான். அவனுடைய ஜ்ஞாநாநந்த மயமான ஸ்வரூபமானது பிரகிருதி ஸம்பந்தத்தினால் நாசடைந்து மறைந்து போகின்றது.

11. பிரகிருதியானது ஸத்வம், ரஜஸ், தமஸ் என்கிற முக்குணங்கள் உள்ளதாய் எப்பொழுதும் பரிணாமத்தை யடையுமதாயிருக்கும். மூலப் பிரகிருதி நித்யமும் ஒன்றுமாம். அது பல விகாரங்களை உண்டு பண்ணுகின்றது.

12. அஸத்தான (எந்த ஆகாரத்தாலு மில்லாத) வஸ்துவின் உத்பத்தியென்பது கிடையாது. ஒரு விதமான அவஸ்தை (நிலைமை) யோடு கூடிய ஒரு வஸ்துவுக்கு இன்னொரு அவஸ்தை அல்லது நிலைமை ஏற்படுவதே உத்பத்தியாம். அந்த அவஸ்தையை விட்டு மற்றொரு நிலைமையை அடைவதே அந்த வஸ்துவுக்கு நாசமாம். மண் என்கிற ஒரு வஸ்துவானது முதலில் பிண்டத்வாவஸ்தை (உருண்டை வடிவமான நிலைமை)யில் இருந்தது. அப்போது அந்த மண்ணானது பிண்டம் என்ற பெயரால் வழங்கப்பட்டது. அந்த மண்ணே, பெரிய வயிறுங் கழுத்தும் வாயுமுடையதாய் வேறு நிலைமையில் மாறவே பானை என்ற பெயரால் வழங்கப்பட்டது. பிண்டம் என்ற பெயரால்



http://acharya.org

வழங்கப்பட்டபோது இருந்த மண்ணே பானை என்ற பெயரால் வழங்கப்படும்போதும் உள்ளதேயன்றி வேறு வஸ்துவல்ல. பானை என வழங்கப்பட்ட அந்த மண்ணே உடைந்து போய்ப் பொடியாய் சூர்ணம் என்ற பெயரால் வழங்கப்படுகிறது. இந்த நிலைமையிலும் பானையென வழங்கப்பட்ட மண்ணே தானிருக்கிறது. நிலைமை மாத்திரம் மாறுபடுகிறது. இந்த நிதர்சநத்தால் தெரிந்து கொள்வதென்ன? ஒரே மண்ணானது பல நிலைமைகளை அடைவதைக் கண்டு கொள்ளுகிறோம். பானையின் உற்பத்தியாவது பிண்ட ரூபமாயிருந்த மண்ணுக்கு வேறொரு நிலைமை ஏற்படுவதேயாம். எனவே, அந்த நிலைமையே உற்பத்தி என்றேற்பட்டது. பானைக்கு நாசமாவது பொடியாய்ப் போவதேயாம். இது போலவே மற்றெல்லாக்காரியப் பொருள்களிலுங் காண்க.

13. ஸ்ருஷ்டிக்கு முன்பு பிரளய தசையிலும் சித்தும் (ஜீவனும்) அசித்தும் (பிரகிருதியும்) உண்டு. அஸத்தான பொருளுக்கு உத்பத்தி கிடையாதென்கிற கொள்கையின்படி ஸ்ருஷ்டிக்குப் பின்பு காணப்படும் சித்தும் அசித்தும் ஸ்ருஷ்டிக்கு முன்பும் இருந்திருக்க வேண்டியதுதான். ஆனால் ஸ்ருஷ்டிக்குப் பின்பு இவை எத்தன்மையனவாய்க் காணப்படிகின்றனவோ அத்தன்மையனவாய் ஸ்ருஷ்டிக்கு முன்பு இருப்பது கிடையாது. அதாவது ஸ்ருஷ்டிக்குப் பின்பு காணப்படும் ஸ்தூலமான ரூபங்களும் நாமங்களும் (உருவங்களும் பெயர்களும்) ஸ்ருஷ்டிக்கு முன்பு இவற்றுக்கில்லை. ஸூக்ஷமமான உருவமும் பொதுவான ஒரே நாமமுந்தான் அத்தசையில் இவற்றுக்குண்டு. இதுவே காரண தசையாம். ஸ்ருஷ்டிக்குப் பின்பு உள்ள பிருதிவி, அப்பு, தேஜஸ், வாயு, ஆகாயம் முதலிய நாமங்களும், அத்தத்துவங்களுக்குள்ள ஸ்தூலமான ரூபங்களும் ஸ்ருஷ்டிக்கு முன்பு பிரகிருதிக்கில்லை. அதி ஸூக்ஷமமான உருவமேயுண்டு. பிரகிருதி என்கிற ஒரே பெயர்தான் வழங்கப்படக்கூடியதாகும். அதுபோலவே ஜீவாத்மாக்களும் அக்காலத்தில் சரீரேந்திரியங்களின்றி ஞான விகாஸமற்று ஸூக்ஷம தசையில் இருக்கிறார்கள்; ஸ்ருஷ்டிக்குப் பின்பு சரீரேந்திரியங்கள் பெற்று அவற்றின் மூலமாக ஞானவிகாஸமும் சக்தியு முடையவர்களாகிறார்கள். ஆகவே பிரகிருதிக்கும் ஜீவாத்மாக்களுக்கும் ஸ்தூலமான ரூபங்களை யடைவதாகிற ஸ்தூலதசையே உத்பத்தியாகும். அத்தசைக்கு மாறுபட்ட ஸூக்ஷம தசையை அடைவதே நாசமாகும்.

14. பிரகிருதி ஜடப்பொருளாய் பரிணாம ஸ்வபாவமுடையதாய் இருக்கையாலே, தானே ஸ்தூலமாகவும் ஸூக்ஷமமாகவும் மாறக்கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அதன் ஸ்தூல ஸூக்ஷம தசைகள் மண்ணினுடைய ஸ்தூல தசையான பானை யென்கிற நிலைமைக்கும் ஸூக்ஷம தசையான பிண்ட நிலைமைக்கும் ஒப்பாகும். ஜீவாத்மாவின் ஸ்வரூபம் நிர்விகாரமாய் பரிணாமத்தை யடையக் கூடாததாயிருப்பதால, நேராக ஸ்தூல வஸ்துவாகவும் ஸூக்ஷம வஸ்துவாகவும் மாறமுடியாது. ஆதலால், ஸ்தூலமான சரீரத்தை யணைவதே அதற்கு ஸ்தூல தசையாம். அதுபோல ஸ்தூல சரீரம் நீங்கி ஸூக்ஷமமான ஜடப்பொருளோடு கூடியிருப்பதே ஸூக்ஷம தசையாம்.

ஜீவாத்மாக்களுக்கு ஸ்தூலத்வ, ஸூக்ஷமத்வங்களாகிற பெருமை சிறுமைகள் இன்னொரு விதமாகவும் சொல்லப்படலாம்; ஜீவாத்மாக்கள் ஸ்தூல சரீரத்தையணைந்து ஜ்ஞாந ஸாதனங்களான இந்திரியங்களோடு கூடியிருக்கும்போதுதான் அவர்களுடைய ஞானம் விரிந்து (விகாஸத்தையடைந்து) விளங்குகின்றது. ஸ்தூல சரீரம் நீங்கி ஸூக்ஷமமான பிரகிருதியில் மண்டிக்கிடக்கும்போது ஞானம் ஸ்வாபாவிகமான தர்மமேயாகிலும் சரீரேந்திரியங்களென்கிற ஸாதநங்களின்றி அது விளங்குவதில்லை. இப்படி ஜீவாத்மாக்களின் ஞானங்களுக்கேற்படும் பெருமை (விரிவு), சிறுமை(குன்றல்)களைப்பற்ற அந்த ஞானத்திலுள்ள ஸ்தூல ஸூக்ஷம தசைகளையிட்டு ஜீவாத்மாக்களுக்கு ஸ்தூல ஸூக்ஷமதசைகளைக் கல்பித்து, உத்பத்தி விநாசங்களை நிரூபிக்கலாம். எவ்விதமானாலும் ஜீவாத்மாவினுடைய ஸ்வரூபத்துக்கு நேராக ஒரு விகாரமும் ஏற்படாது.



http://acharya.org

15. சித்து, அசித்து என்கிற வகுப்பினுள் அடங்கிய எல்லாப் பொருள்களும், ஈச்வரனுக்குச் சரீரங்களாம். ஜீவாத்மாக்களான நமக்கு, பஞ்ச பூதங்களாலாகிய கை, கால் முதலிய அவயவங்களோடு கூடிய பிண்டமானது எப்படி சரீரமாயிருக்கின்றதோ, அதுபோலவே, ஜடம், சேதநம் ஆகிய இருவகைப் பொருள்களும் கடவுளுக்குச் சரீரங்களாயிருக்கின்றன. நமது சரீரங்களுக்குள் ஜீவாத்மாக்களின் இருப்பினால் இந்த சரீரங்கள் எப்படி தரித்திருக்கின்றனவோ, அப்படி சேதநங்கள் என்கிற இருவகைப்பட்ட பொருள்களுள் கடவுள் வியாபித்து நிற்பதனால் அவை தரித்திருக்கின்றன. கடவுள் எல்லாப் பொருள்களுக்குள்ளும் வியாபித்து நின்று அவற்றை நியமித்துக் கொண்டும் தரித்துக்கொண்டு மிருக்கிறான். ஜீவனில்லாது நமது சரீரங்கள் எப்படி உருவோடிருக்க முடியாதோ, அப்படியே ஈச்வரனின்றி எப்பொருளும் உருவோடிருக்க முடியாது.

16. ஒரு அவஸ்தையை (நிலைமையை) விட்டு மற்றொரு அவஸ்தையை அடைவதே உத்பத்தியும் நாசமுமாம். (12–வது பாரா பார்க்க). ஸ்ருஷ்டி தசையிலும் ப்ரளய தசையிலும் வெவ்வேறு பட்ட அவஸ்தைகள் (நிலைமைகள்) பரப்ரஹ்மத்திலும் ஏற்படுகின்றன. ப்ரளய காலத்தில் பரப்ரஹ்மம் ஸூக்ஷ்ம அவஸ்தையில் நின்ற பிரகிருதியிலும் ஜீவனிலும் அந்தர்யாமியாய் இருக்கிறது. ஸூக்ஷ்மமான பிரகிருதியையும் ஜீவனையும் தனக்குச் சரீரமாகக் கொண்டிருக்கை ப்ரஹ்மத்துக்கு ஸூக்ஷ்மாவஸ்தையாம். குழந்தைப் பருவத்தையுடைய சரீரத்தோடு நிற்கும் ஜீவாத்மாவுக்கு பால்யாவஸ்தைபோலே ப்ரஹ்மத்தின் இந்த அவஸ்தையாம். இதுவே காரணாவஸ்தை யெனப்படுகிறது. ஸ்தூல அவஸ்தையையடைந்த பிரகிருதி ஜீவன் இவைகளுக்கு, ப்ரஹ்மம், ஸ்ருஷ்டிக்குப் பின்பு அந்தர்யாமியாயிருக்கிறது. ஸ்தூலமான பிரகிருதி ஜீவன் இவைகளைத் தனக்குச் சரீரமாகக் கொண்டிருக்கை ப்ரஹ்மத்துக்கு ஸ்தூலாவஸ்தையாம். யௌவனப் பருவத்தில் நின்ற சரீரத்துள் இருக்கும் ஜீவனுக்கு யௌவநாவஸ்தைபோல ப்ரஹ்மத்தின் இவ்வவஸ்தையாம். இதுவே கார்யாவஸ்தை எனப்படுகிறது. மண்ணானது பிண்ட வடிவமாய் நின்றபோது மட்பானைக்கு காரணமாகிறது; பானை வடிவமாய் ஆனபின்பு அதுவே கார்யமாய் விடுகிறது. காரணமாய் நின்றபோதும் கார்யமாய் மாறின பின்பும் மண்ணானது ஒன்றே. அதுபோல் உலகத்துக்குக் காரணமாய் நின்ற ப்ரஹ்மமே கார்யமாய் உலகமாய் விடுகிறது. ஆகவே ப்ரஹ்மமே உலகம், ப்ரஹ்மமே உலகத்துக்குக் காரணம்.

17. ஸ்தூல அவஸ்தையோடு கூடிய சித்தும் (ஜீவன்) அசித்தும் (ஜடப்பொருள்–பிரகிருதி) பரப்ரஹ்மத்தின் சரீரங்களாம். (15–வது பாரா பார்க்க). இப்படி இவையிரண்டும் சரீரங்களாயிருப்பது பற்றிப் பரப்ரஹ்மத்துக்கு விசேஷணங்களாயிருக்கின்றன. பரப்ரஹ்மத்துக்குச் சரீரமாயிருக்கைதான் இவைகளின் விசேஷணத்வமாம். இவை ப்ரஹ்மத்துக்கு விசேஷணங்கள் என்றால் ப்ரஹ்மத்தோடு ஸம்பந்தமுடையவைகள் என்றதாம். ஜீவாத்மாவுக்கும் பஞ்சபூத மயமான சரீரத்துக்கும் எத்தன்மையதான ஸம்பந்தமுண்டோ, அத்தன்மையதான ஸம்பந்தம் ப்ரஹ்மத்துக்கும் சித், அசித் எனப்படும் இவ்விரு பொருளுக்குமுளது. ஆக, இவ்விரு பொருள்களும் ப்ரஹ்மத்தோடு ஸம்பந்த முடையவைகளா யிருக்கவே, ப்ரஹ்மம் இவ்விரு பொருள்களோடுங் கூடியிருக்கின்ற தென்றதாகும். இவ்வர்த்தத்தையே ''விசிஷ்டம்'' என்கிற பதமானது கூறுகின்றது. இதனால் பரப்ரஹ்மம் சிதசித்விசிஷ்டம்– என்றால் அவ்விரு பொருளோடும் கூடியதென்றதாகும். இவ்விரு பொருள்களுக்கும் ப்ரஹ்மத்துக்கும் உள்ள ஸம்பந்த மின்ன விதமானதென்று முன்பு கூறினோம். ஆகவே, சிதசித்விசிஷ்டம் ப்ரஹ்மம்– என்றால் சித் அசித் எனப்படும் அவ்விரு பொருள்களுள்ளும் அந்தர்யாமியாய் நின்று அவைகளை நியமித்துக் கொண்டும் தரித்துக்கொண்டு மிருக்கின்ற தென்றதாகும். சித் அசித் இவ்விரு பொருள்களுக்கும் ஸ்தூல ஸூக்ஷ்மாவஸ்தைகள் உண்டென



http://acharya.org

முன்னே சொன்னோம். (13–14 பாராக்கள் பார்க்க). அவ்விரு அவஸ்தைகளிலும் அதாவது அவைகள் ஸூக்ஷ்மமா யிருக்கும்போதும் (காரணாவஸ்தையிலும்) ஸ்தூலமா யிருக்கும்போதும் (கார்யாவஸ்தையிலும்) அவை ப்ரஹ்மத்துக்கு சரீரங்களாம். ஆகையால் ப்ரஹ்மம் ஸ்தூலாவஸ்த சிதசித் விசிஷ்டமாயும் (சிதசித் சரீரகமாயும்) ஸூக்ஷ்மாவஸ்த சிதசித் விசிஷ்டமாயும் இருக்கின்றது. ப்ரஹ்மம் ஒன்றே. ஆகையால் ஸ்தூலவஸ்த சிதசித் விசிஷ்டமாயும் ஸூக்ஷ்மாவஸ்த சிதசித் விசிஷ்டமாயும் இருக்கிற ப்ரஹ்மம் ஒன்றேயாம். அத்வைதம்– என்றால் அபேதம் (ஐக்யம்). ஸ்தூல சிதசித் விசிஷ்டமான ப்ரஹ்மத்துக்கும் ஸூக்ஷ்ம சிதசித் விசிஷ்டமான ப்ரஹ்மத்துக்கும் பேதமில்லை. இரண்டும் ஒன்றே. விசிஷ்டாத்வைதம் என்றால் விசிஷ்டங்களான பொருள்களின் அபேதம். முன் கூறியபடி ஸூக்ஷ்ம சிதசித் விசிஷ்ட ப்ரஹ்மம் என்கிற காரணப் பொருளுக்கும் ஸ்தூல சிதசித் விசிஷ்ட ப்ரஹ்மம் என்கிற கார்யப் பொருளுக்கும் பேதமில்லை. காரணமும் கார்முமாயிருப்பது ஒரே மூலதத்துவ மென்றதாயிற்று. இதுவே விசிஷ்டாத்வைதம்.

ஆக, விசிஷ்டாத்வைத சப்தார்த்த நிரூபணம் இங்ஙனே செய்யப்பட்டது – சிலருடைய கொள்கையை அடி யொற்றியாம். அதனை மற்றொரு விதமாகவும் சில க்ரந்தங்களில் பெரியோர் நிரூபித்திருக்கிறார்கள். அது பின்வருமாறு ;–

த்வைதம்– என்கிற சொல்லுக்கு பேதமென்பது பொருள்; அத்வைதம்– என்றால் அபேதம். இதுவே ஐக்யம். விசிஷ்டம்– என்றால் கூடினது, அல்லது கூட்டு, அர்த்தமாம். விசிஷ்டாத்வைதமென்றால்– கூட்டுப் பொருளின் ஐக்யம் என்றர்த்தம்; கூட்டுப் பொருள் ஒன்று என்றதாகும்.

சித், அசித், ஈச்வரன்– என மூலப் பொருள் மூன்று. (பாரா 1– பார்க்க). இவற்றுள் சித்தும், அசித்தும் ஈச்வரனுக்கு சரீரங்கள். (பாரா 15– பார்க்க). ஆகவே ஈச்வரன் இவ்விரு பொருள்களையும் தனக்கு சரீரமாகக் கொண்டிருக்கிறான் என்றால், இவ்விரு பொருள்களோடும் கூடி நிற்கிறான்– என்றதாகும். ஆக இம்மூன்று பொருளும் சேர்ந்து ஒரு கூட்டாக நிற்கின்றன. மனிதன் என்பதென்ன? கை, கால் முதலிய பல உறுப்புகளோடு கூடிய ஜடப்பொருளான உடலும் அதற்குள் நிற்கும் ஞானஸ்வரூபியான ஆன்மாவுமாகிய இவ்விரு பொருள்களின் கூட்டேயாம். தனிப்பட ஆன்மா மாத்திரமும் உடல் ஒன்று மாத்திரமும் மனிதனல்ல. மனிதனென்பது ஜடம், சேதநம் ஆகிய பொருள்களின் கூட்டு. இவ்விதம் ஜீவனோடு கூடிய ஒருடலைக் கண்டால் 'மனிதன் ஒருவன்' என்கிறோம். ஒருவன் என்கிற சொல் ஐக்யத்தைக் குறிக்கிறது. உடலும் ஆன்மாவுமாகிய இரண்டு பொருள்களிலிருந்தும் கூட்டுப் பொருளாகிய மனிதன் ஒருவனேயாகையால் மனிதன் ஒருவனெனக் கூறுகிறோம். அதுபோல் சித், அசித், ஈச்வரன் என இம்முப் பொருள்களின் சேர்க்கையினாலாகிய கூட்டுப் பொருள் ஒன்றாகையால் ப்ரஹ்மம் ஒன்றெனப்படும். இங்கு ஒன்று என்கிற சொல்லின் பொருளாகிய ஐக்யம் கூட்டுப் (விசிஷ்டம்) பொருளில் நிற்கிறது. இதுவே விசிஷ்டாத்வைதமாம்.

18. தேவதா சரீரம், மநுஷ்ய சரீரம் முதலிய சரீரங்களுள் இருந்தாலும் அச்சரீரங்களின் தோஷங்கள் ஜீவாத்மாவினிடம் எப்படி பற்றுகிற தில்லையோ அப்படியே ப்ரஹ்மம் தனக்குச் சரீரமாகிய சித், அசித் எனப்படும் இருவகைப் பொருள்களுள்ளும் அந்தர்யாமியாய் வியாபித்து நின்றாலும் அவ்விரு பொருள்களின் தோஷங்கள் ப்ரஹ்மத்தினிடம் பற்றுகிறதில்லை. த்ருஷ்டாந்தமான ஜீவாத்மாவுக்கும் ப்ரஹ்மத்துக்கும் ஒரு வித்தியாசமுண்டு. சரீரத்துள் நிற்கும் ஜீவாத்மாவுக்கு, சரீரத்தினுடைய பால்யம், யௌவநம், ஜரை முதலிய தோஷங்களின் ஸம்பந்தம் இல்லாமல் போனாலும் சரீரத்தின் ஸம்பந்தத்தினாலாகிய சுகம், துக்கம் முதலிய சில ஏற்படுகின்றன. ப்ரஹ்மத்துக்கோ வெனில், ஜடம், ஜீவன் என இருவகைப்பட்ட அனந்தமான பொருள்களைத் தனக்குச் சரீரமாய்க்



http://acharya.org

கொண்டு அவற்றுள் நிறைந்து நின்றாலும், சுகதுக்கம் முதலிய எவ்விதமான தோஷங்களும் உண்டாகிறதில்லை. ஏனென்றால், ஜீவாத்மாக்களுக்கு சரீர ஸம்பந்தம் தன்னிச்சையால் தானே ஏற்படுத்திக் கொண்டதாயிராமல் கர்மாநுஸாரமாகக் கர்ம பலாநுபவத்துக்காக உண்டு பண்ணப்பட்ட சரீரங்களுள் கடவுளால் புகுத்தப்பட்டுப் பரவசமாய் நிற்கிற காரணத்தினாலே, கர்மம் காரணமாக வந்ததாகும். ஆகவே எந்த கர்மங் காரணமாகச் சரீரங்களுள் புகுத்தப்பட்டானோ அந்த கர்மங்களின் பலமான சுக துக்கங்களை அவன் அநுபவிக்க வேண்டியவனாயிருக்கிறான். ப்ரஹ்மமோ வெனில் தன் இச்சையால் அவ்விருவகைப்பட்ட பொருள்களையும் தரித்து நிற்பதற்காக அப்பொருள்களுள் புகுந்து நிற்கிற படியால் கர்மம் காரணமாக வரக்கூடிய சுகதுக்கங்கள் அதற்கில்லை.

19. அநாதியான அவித்யை (அஜ்ஞானம்)யினால் செய்யப்பட்டுத் திரண்டு கிடக்கும் கர்மங்கள் காரணமாக உண்டான பிரகிருதியின் ஸம்பந்தத்தினால் ஜீவாத்மாக்களின் ஸ்வாபாவிகமான ஸ்வரூபம் மறைக்கப்பட்டு கிடக்கின்றது. (9–10 பாராக்கள் பார்க்க). இதுவே பந்தாவஸ்தை. அக்கர்மங்கள் நசித்தபின் ஸ்வாபாவிகமான ஸ்வரூபம் ஆவிர்ப்பவிக்கும். பிரகிருதி மண்டலத்திற்குப் புறம்பே போனால்தான் பிரகிருதி ஸம்பந்தம் நீங்கமுடியும். ஆகையால் இப்பிரகிருதி மண்டலத்தின் அப்பாலுள்ள சுத்த ஸத்வமயமான அப்ராகிருத ஸ்தானமாகிய பரமபதம் போய்ச் சேர்ந்தாலொழிய ஸ்வாபாவிகமான ஸ்வரூபம் ஆவிர்ப்பவிக்க முடியாது. பரமபதமெனப்படும் அந்த ஸ்தான விசேஷத்தில் போய்ச் சேர்ந்த பின், பிரகிருதி ஸம்பந்தம் நசித்துப் போய்விடுங் காரணத்தினாலே ஸ்வாபாவிகமான ஞானானந்த மயமான ஸ்வரூபம் ஆவிர்ப்பவிக்கவே, தடையில்லாமையால் பரப்ரஹ்மத்தின் அநுபவம் ஜீவாத்மாவுக்குக் கிடைக்கிறது. அதனால் பரமானந்த மடைகிறான். இப்படி பிரகிருதி மண்டலத்தின் புறம்பேயுள்ள பரமபத மெனப்படும், அப்ராகிருத ஸ்தானத்தில் போய்ச்சேர்ந்து ஸ்வாபாவிகமான ஸ்வரூபத்தின் ஆவிர்ப்பாவம் உண்டாகிப் பரப்ரஹ்மத்தின் அநுபவம் பெற்று ஆனந்திப்பதே மோக்ஷமாம்.

20. மோக்ஷம் அடைவதற்கு பக்தியும் ப்ரபத்தியும் உபாயங்களாம். தைலத்தின் (எண்ணெயின்) தாரைபோலே அவிச்சிந்நமாய் (நடுவில் துண்டு விழாமல்) ப்ரஹ்மத்தை த்யானம் (ஸ்மரிக்கை) செய்ய, அந்த த்யானமானது இமைப்பொழுதும் விடாமல் ஸதாகாலம் செய்து கொண்டிருப்பதனால் பாவநாபலத்தால் ப்ரத்யக்ஷத்துக்கு ஸமானமாக, (நேரில் காண்பது போன்ற நிலைமை ஏற்பட) ப்ரஹ்மத்தினிடத்தில் உண்டான அன்பு காரணமாக அந்த த்யானம்– மற்ற வஸ்துக்களில் விருப்பமுண்டாகாமல் ஸதாகாலம் விரும்பப்படும் (ப்ரியம்) படியான நிலைமையை எய்துமேயானால் அதுவே பக்தி யெனப்படும். ஒவ்வொரு நாளும் பலாபேக்ஷையின்றி அவரவர்களின் வர்ணாசிரமங்களுக்குத் தக்க நித்யநைமித்திக கர்மங்களைச் செய்வதால் பக்தி ஸித்திக்கும். அந்த பக்தியால் பரப்ரஹ்மத்தை யடைவதாகிற மோக்ஷம் ஸித்திக்கும். (19–வது பாரா பார்க்க). ப்ரபத்தியாவது– மஹா பாகவதர்களின் ஸஹவாஸத்தாலும் உபதேசத்தாலும் ஸ்வரூப ஞானம் உண்டாகி ஸம்ஸாரத்தில் வைராக்யம் பிறந்து, ஸதாசார்யனை அடைந்து கர்மம், ஞானம், பக்தி முதலியன தனது ஸ்வரூபத்து (கடவுளுக்குத் தான் அத்யந்த பரதந்த்ரனாய் அவனுடைய வஸ்துவாயிருக்கை)க்கு ஒத்ததல்லவென்று தெளிந்து, ஸ்வாமியான ஈச்வரனைத்தவிர வேறுகதியில்லையென்று துணிந்து ஆசார்ய முகத்தால் ஈச்வரனையே மோக்ஷத்துக்கு உபாயமாகப் பற்றுதலாம். இப்படி ஈச்வரனையே உபாயமாகப்பற்றவே, தனது வஸ்துவான இச்சேதநனை ஸம்ஸாரத்தில் நின்றும் விடுவிக்கை தனது கடமையென்று நினைத்திருக்கும் ஈச்வரன் இவனைப் புண்ய பாபங்களாகிற கர்மங்களிலிருந்து விடுவித்து மோக்ஷ ஸாம்ராஜ்யத்தை யளிக்கும்.



http://acharya.org

# ஸித்தித்ரயத்தின் உட்பொருள்

**ஸ்ரீ உ.வே. திருநாங்கூர் வித்யாபூஷணம் ப்ர.ப. அண்ணங்கராசார்யர் ஸ்வாமி**

*மங்கள ச்லோக விளக்கம்*

“மாநத்வம் பகவந்மதஸ்ய மஹத: பும்ஸஸ்ததா நிர்ணய:
திஸ்ரஸ் ஸித்தய ஆத்மஸம்விதகிலாதீசாந தத்வாச்ரயா:
கீதார்த்தஸ்ய ச ஸங்க்ரஹஸ்துதியுகம் ஸ்ரீ ஸ்ரீசயோரித்ய
யத் க்ரந்தாநநுஸந்ததே யதி மூந் பதிஸ்தம் யாமுநேயம் நம:

ஸ்ரீகீதார்த்த ஸங்க்ரஹ ரக்ஷையின் ஆரம்பத்தில் ஸ்ரீவேதாந்த தேசிகன் அநுஸந்தித்த சுலோகம் இது. இதன் பொருள்:–

ஆகம ப்ராமண்யம், மஹாபுருஷ நிர்ணயம், ஆத்ம, ஈச்வர, ஸம்வித் ஸித்திகள், கீதார்த்த ஸங்க்ரஹம், ஸ்ரீகாந்தாஸ்தோத்ரம், ஸ்தோத்ர ரத்னமான ஸ்ரீசஸ்துதி என்கிற ப்ரபந்தங்கள் எந்த ஆசார்யரால் அருளிச் செய்யப்பட்டதாக ஸ்ரீபாஷ்யகாரர் அநுஸந்திக்கிறாரோ, பரமாசார்யராய் விளங்கும் அந்த ஸ்ரீஆளவந்தாரை துதிக்கின்றனம் என்பதாம்.

தற்சமயம் நமக்குக் கிடைத்திருக்கும் நம் பூர்வாச்சார்யர்கள் அருளிச் செய்த ப்ரபந்தங்களில் முதன்மை பெற்று விளங்குபவை பரமாசார்யரான ஸ்ரீஆளவந்தார் அருளிச் செய்த ப்ரபந்தங்களேயாம். ஸ்ரீமந்நாதமுனிகள் அருளிச் செய்த ந்யாய தத்வம், யோகரஹஸ்யம், என்கிற ப்ரபந்தங்கள் நமக்குக் கிடைக்கவில்லை.

ஆளவந்தார் அருளிய மஹாபுருஷ நிர்ணயமும் அப்படியே. ஆனால் பூர்வர்கள் இப்பிரபந்தங்களையும் அதிற்கண்ட விஷயங்களையும் கையாண்டிருக்கிறார்கள், என்பது திண்ணம். மற்றைய ப்ரபந்தங்களை வைத்துக்கொண்டு ஆகமப்ராமண்யம், ஸ்ரீபகவச்சாஸ்திரம் எனப்படும் ஸ்ரீபாஞ்சராத்திரத்தின் ப்ராமாண்யத்தை பகுமுகமான யுக்திகளாலே நிலைநாட்டுகிறது. வேதம் போலே ஸ்ரீபாஞ்சராத்ரமும் ப்ரபல ப்ரமாணம் என்று பரமாசார்யர் இதில் மூதலித்துப் போந்தார்.

ஸ்ரீபாஷ்யகாரர் உத்பத்யஸம்பவாதி கரணத்திலே இதை அடியொற்றியே ஸ்ரீபாஞ்சராத்ர ஆகம ப்ராமாண்யத்தை, ஸித்தாந்தமாக நிர்ணயித்தருளினார். நம்மாழ்வாரால் மயர்வற மதிநலமருளப் பெற்றவரான ஸ்ரீமந் நாதமுனிகளின் உபதேச பரம்பராப்ராப்தமான ஸ்ரீகீதையின் அர்த்தங்களை ஸங்க்ரஹித்து உபகரித்தார் பரமாசார்யர். அந்த கீதார்த்த ஸங்க்ரஹத்தைத் தழுவியே நம் ராமாநுஜ முநி, “மாயன் அன்றைவர் தைவத்தேரினில் செப்பிய கீதை”யின் செம்மைப் பொருள்களைப் பாரினில் தெரியச்சொன்னது. எம்பெருமானார், கத்யம் அருளிச் செய்ததும் ஸ்ரீ ஸ்ரீசஸ்துதிகளை அடியொற்றியேயாம்.

ஸித்தித்ரயத்தை ஆதாரமாகக்கொண்டே ஸ்ரீபாஷ்யத்தில் மஹாஸித்தாந்தத்திலும் மற்ற இடங்களிலும் அநேக அர்த்த விசேஷங்களை நிர்ணயித்தருளினார். எனவே



http://acharya.org

ஜகதாசார்யரான எம்பெருமானார்க்குப் பரமாசார்யராய் அவருடைய விசிஷ்டாத்வைத ஸித்தாந்த ஸ்தாபனத்திற்கு வழிகாட்டியாய் விளங்கும் மஹாப்ரபந்தங்களை அருளிச்செய்தவராயுள்ள ஸ்ரீஆளவந்தாரின் பெருமையும் மதிமான்களுடைய சிந்தைக்கும் கோசரமல்ல என்பது வெள்ளிடைமலை.

இனி பெரியோர்களின் நியமனத்தை முன்னிட்டு ஸ்ரீஆளவந்தாரருளிய ஸித்தித்ரயத்தின் உட்பொருளைச் சுருக்கமாகவும் ஸாரமாகவும் விளக்க முற்படுவோம்.

ஸித்தி என்பது தத்துவ நிர்ணயம். ஜீவாத்மா, பரமாத்மா, பகுத்தறிவதற்குரிய ஸாதநமான ப்ரமாணஜ்ஞானம், ஆகிய இம்மூன்றினுடைய தத்துவங்களை நிர்ணயித்துத் தருவதால் ஆத்மஸித்தி, ஈச்வரஸித்தி, ஸம்வித்ஸித்தி என்று நூல்களுக்குப் பெயராயிற்று. இவற்றுள் முதலில் ஸம்வித்ஸித்தியையும், பிறகு ஆத்மஸித்தியையும், அதற்குப் பிறகு ஈச்வரஸித்தியையும் அருளிச் செய்தார் என்று ஊஹிக்க இடமுண்டு. ஏனெனில் ஆத்மஸித்தியில் ஸம்வித்ஸித்தியையும் ஈச்வரஸித்தியில் ஆத்மஸித்தியையும் ப்ரஸ்தாபித்திருப்பதை காண்கிறோம். ஸம்வித்ஸித்தியில் முதலிலும் நடுவிலும் கடைசியிலும் அநேக பாகங்கள் லுப்தமாயின. மற்ற இரு ஸித்திகளிலும் கடைசி பாகம் லுப்தம். மீமாம்ஸகரான குமாரிலபட்டர் தம்மால் செய்யப்பட்ட 'சுலோக வார்த்திகம்' போலே ஸம்வித்ஸித்தி ச்லோகங்களாலேயே செய்யப்பட்டதாம். மற்ற ஸித்திகளிரண்டும் தந்த்ரவார்த்திகம், டுப்டீகை போலே கத்யரூபமாய் அமைந்திருக்கின்றன.

ப்ரமாணங்களைக்கொண்டே பொருள்களின் உண்மை நிலையை அறிய வேண்டும் என்பது நூல்களில் கண்ட விதியாகும். அதன்படி ஸம்வித்ஸித்தியில் ப்ரமாண நிஷ்கர்ஷத்தையும் மற்ற இரு ஸித்திகளில் ப்ரமேய நிஷ்கர்ஷத்தையும் பண்ணினார் எனவும் கொள்ளலாம். வைதீக உத்தமரான பரமாசார்யர் வேத சாஸ்த்ரங்களையே முக்கிய ப்ரமாணமாகக் கொண்டவர். ஆயினும் சுஷ்க தர்க்கவாதிகளை நிரஸித்துத் தன் ஸித்தாந்தத்தை நிலைநாட்டுவதற்கு ப்ரமாணாநுகூலமான ஸத்தர்க்கங்களையே முக்கிய கருவியாகக் கொண்டு ஸித்தித்ரயத்தில் புறச்சமயவாதிகளை வாதப்போரில் தர்க்க சரங்களாலே தோற்கடித்து தாம் வெற்றி கொண்டு தம்முடைய ஸித்தாந்தத்தை நிலைநாட்டியருளினார். எனவே ஸித்தித்ரயம் ஆளவந்தாரின் வெற்றிக்கொடி எனப் போற்றத்தக்கதாகத் திகழ்கிறது.

ஆத்மஸித்தியின் ஆரம்பத்தில் பரமாசார்யர் க்ரந்தம் இயற்றப்போதுமான காரணத்தைத்தானே ''விருத்தமத யோநேகாஸ் ஸந்த்யாத்ம பரமாத்மநோ:, அதஸ் தத்பரிசுத்யர்த்தம் ஆத்ம ஸித்தீர் விதீயதே என்கிற சுலோகத்தில் அருளிச் செய்தார். இச்சுலோகத்தின் பொருள்:– ஆத்ம பரமாத்மாக்களுடைய தத்துவஜ்ஞானம் முக்திக்கு இன்றியமையாத ஸாதநம் என்று வேதமும் வேதார்த்த முணர்ந்த பெரியோரின் நூல்களும் பறைசாற்றுகின்றன. இவ்விரு ஞானத்திலும் புறவாதியர்களின் துர்வாதங்களால் கலக்கம் ஏற்பட்டிருக்கிறது. அக்கலக்கம் நீங்கி ஆத்மதத்துவத்தை உள்ளபடி அறிந்து உஜ்ஜீவிப்பதற்கு உறுப்பாக ஆத்மஸித்தி என்னால் செய்யப்படுகிறது என்பதாம்.



http://acharya.org

***ஆத்ம ஸித்தியின் உட்பொருள்:-***

நான், நான் எனத் தனக்குத்தானே எப்போதும் தோற்றும் ஆத்ம விஷயத்திலே, தேஹமே ஜீவன் என்றும், புலன்களே ஜீவன் என்றும், மனமே ஜீவன் என்றும், ப்ராணனே ஜீவன் என்றும், புத்தியே ஜீவன் என்றும் சொல்லுகிற புறவாதியர்களின் வாதங்களைக் கண்டித்து இவற்றைக் காட்டிலும் வேறுபட்டதாய் இருக்கும் ஜீவாத்மஸ்வரூபம். அதுதான் ஞானச்ரயமாய், நித்யமாய், அணுவாய் அநேகமாயிருக்கிறது. இப்படியிருக்கும் ஆத்ம ஸ்வரூபம் சுதந்திரம் அன்று. எப்போதும் பரமாத்மாவுக்குச் சரீரமாய் பரதந்திரமாய் சேஷமாயிருக்கும் என்று ஆத்மஸ்வரூப யாதாத்ம்யத்தை நிஷ்கர்ஷித்தார் ஆத்மஸித்தியில்.

''தேஹேந்த்ரிய மந: ப்ராண தீப்யோ ந்யோநந்யஸாதந:

நித்யோ வ்யாபீ ப்ரதிக்ஷேத்ரமாத்மா பிந்நஸ் ஸ்வதஸ்ஸுகீ

என்கிற ச்லோகத்தில் ஆத்மாவின் உண்மையான தன்மையைச் சுருங்கச் சொல்லி, மேல்யுக்திகளாலே விளக்கியருளினார். இந்த ச்லோகத்தில் இருக்கும், 'வ்யாபீ' என்கிற பதத்திற்கு எல்லா அசேதனங்களுக்குள்ளும் இருக்கத் தக்கவன், அணு, ஸூக்ஷ்மன் என்று பொருளுரைத்தார் ஸ்ரீபாஷ்யகாரர். ''கரந்த சிலிடம் தொறுமிடந் திகழ் பொருடொறும்'' என்கிற நம்மாழ்வாரின் ஸ்ரீஸூக்தியைக் கொண்டு இப்படியருளிச் செய்தபடி. எனவே ஜீவன் விபு என்று ப்ரமிக்க இடமில்லை.

தைத்திரீயோபநிஷத்தில் அன்னமய ப்ராணமய மனோமயங்களுக்கு அவ்வருகே சரீரம், ப்ராணன், மனம், இவற்றைக் காட்டிலும் வேறுபட்டிருக்கிற ஜீவாத்மாவை ''விஜ்ஞாந மய:'' என்று குறிப்பிட்டிருக்கிறது. அறிவு நிறைந்தவன் என்றபடி. உணர்வற்ற பொருள்களைக் காட்டிலும் ஆத்மாவுக்குண்டான வாசியை வேத புருஷன் ''விஜ்ஞாந மயன்'' என்னும் சொல்லால் காட்டினான். நம்மாழ்வாரும் ''சென்று சென்று பரம்பரமாய்:'', ''என் ஊனில் உயிரில் உணர்வினில் நின்ற வொன்றை உணர்ந்தேனே'' என்று இந்த ஆத்மஸ்வரூப வைலக்ஷண்யத்தை அனுஸந்தித்தார். ஆளவந்தார் ஆத்மஸித்தியில் இதனை நிலைநாட்டினார்.

மாயாவாதிகள்; அறிவே ஆத்மா; ஆத்மாவும் பரமாத்மாவும் ஒரு அறிவேயாம். அந்த அறிவே பரப்ரஹ்மம். பரம்பொருள் வேறொரு பொருளுமில்லை. அறிவே அவித்யையால் ஆத்மா, பரமாத்மா என்று வெவ்வேறாகத் தோற்றுகிறது, என்றார்கள். இந்த மாயாவாதத்தையும் ஆத்மஸித்தியில் கண்டித்தார், எங்ஙனே என்னில், 'நான் அறிகிறேன்' என்று எல்லாரும் தன்னை அறிவுள்ளவனாக அநுபவிக்கிறார்கள். நான் அறிவுதான் என்று ஒருவரும் அனுபவிக்கவில்லை. ஆகையால் லோகாநுபவத்துக்குப் பிறருடைய வாதம் முரண்பட்டது. சாஸ்திர விரோதமும் அதற்குண்டு. ''ஜாநாத்யே வாயம் புருஷ:'' என்றும் ''ய: ஸர்வஜ்ஞஸ் ஸர்வவித்'' என்றும் அறிவுள்ளவர்களாகவே ஆத்மாவையும் பரமாத்மாவையும் வேதவசனங்கள் கூறுகின்றன. ஜீவனும் ப்ரஹ்மமும் ஒன்று என்பதும் பொருந்தாது. ஜீவன் ஸம்ஸரிக்கக் கூடியவன். ப்ரஹ்மம் ஸம்ஸார ஸம்பந்தமில்லாதது. ப்ரஹ்மமே அவித்யையால் தன்னை ஸம்ஸாரியாக ப்ரமிக்கிறது என்கிற வாதம் பரிகசிக்கத் தக்கதேயாம் என்றிவ்வாறு மாயாவாத நிரஸனம் பண்ணினபடி.



http://acharya.org



ஆளவந்தார், காட்டுமன்னார் கோயில்



http://acharya.org

ஜீவாத்மாவின் ஸ்வாபாவிகமான நிலைநின்ற ஆகாரத்தை "ஸ்வத: சுகீ" என்று குறிப்பிடுகிறார். பகவத் குணாநுபவத்தைப் பண்ணி உகந்து பணி செய்து களித்திருப்பதுதான் ஆத்மாவின் உண்மையான நிலை. ஸம்ஸார துக்கங்கள் அநாதிகாலமாகப் பண்ணின கர்மபலனாய் வந்தேறியாயுள்ளன. பகவானைச் சரணமடைந்து அவனுடைய கருணாவிசேஷத்தினால் இவனுக்கு கர்ம பந்தம் விடுபட்டால் 'ஸ்வத: சுகீ' என்னும் நிலை சாச்வதமாக ஸித்திக்கும் என்று ஆத்மஸித்தியில் நிரூபித்தருளினார். ஸ்வாமி எம்பெருமானார் யஜ்ஞமூர்த்தி என்னும் மஹாமேதாவியான மாயாவாதியோடு பதினெட்டு நாள் வாதப்போர் நடத்துகையில் 17–ம் நாள் வாதத்தின் இறுதியில் மேல் கோடி தோன்றாமல் திகைத்திருக்க, அன்றிரவு ஸ்வப்னத்தில் பேரருளாளர் இவருக்கு, ஆளவந்தார் ஆத்மஸித்தியில் அருளிச் செய்த "சாந்தாங்கார இவாதித்யம்" இத்யாதியான மாயாவாத நிரஸன ப்ரகாரங்களை உபந்யஸித்து வாதியை ஜயித்து அந்தரங்க சிஷ்யனாக ஆக்கிக் கொள்ளும் என்று நியமித்தருள, இவரும் ப்ரபுத்தராய்த் தெளிந்தெழுந்து பிற்றை நாள் வாதத்தில் ஆளவந்தார் காட்டின வழியைப் பின்பற்றி வாதியை வென்று தனக்கு சிஷ்யனாக்கிக் கொண்டு "அருளாளப் பெருமாள் எம்பெருமானார்" என்று நாமகரணமும் செய்து அவருடனே கூடியிருந்தே தர்சனத்தை நிர்வகித்துக் கொண்டு போந்தார். குருபரம்பரையிலுள்ள இவ்வரலாற்றைச் சிந்தித்துப் பார்த்தால் விவேகிகளுக்குப் பரமாசார்யரான ஸ்ரீஆளவந்தாரின் ஸ்ரீஸூக்திகளின் வீறுடைமை நன்கு விளங்கும்.

### ஈச்வரஸித்தியின் உட்பொருள்

வேதத்தைப் பிரமாணமாக ஒத்துக்கொண்டும் வேதவேத்யனான பரமபுருஷனை ஒத்துக்கொள்ளாமல் யாகாதி கர்மங்களை அபூர்வத்தை உண்டுபண்ணி அதன் வழியாகச் சுவர்க்கம் முதலிய பலங்களைத் தருகின்றன, ஆகையால் ஜகத் காரணமாய்க் கர்மபலங்களைக் கொடுக்கும் ஸர்வேச்வரனால் ஒரு காரியமுமில்லை என்று நிரீச்வரவாதம் செய்யும் கர்மமீமாம்ஸகர் கூறும் கூற்றைத் தகர்த்து, ப்ரளயத்தில் அழிந்து கிடந்த எல்லாவுலகுகளையும் மறுபடியும் ஸ்ருஷ்டி காலத்தில் படைத்துக் காத்தருளும் ஸர்வேச்வரன் ஒருவனுளன் என்று சுடர்மிகு சுருதி கூறாநிற்கச் செய்தே நிரீச்வரவாதம் பண்ணுமிவர்கள் ஆஸ்திக நாஸ்திகராகிறார்கள்.

மேலும் எவனுடைய ஆராதனங்களான யாகாதிகள் சாஸ்திரத்தினால் விதிக்கபடுகின்றனவோ; யாகாதிகளால் ஆராதிக்கப்பட்டவனுடைய அநுக்ரஹத்தினாலேயே பலத்தை அவரவர் அடைகின்றனரோ; அந்தப் பரமனில்லாத போது கர்மமும் கர்மபலனும் ஸித்திக்காது.

அழிந்து கிடந்த வஸ்துவுக்கு நாமரூபங்கள் உண்டாவதற்கும் ஒரு விதாதா வேணும், ஆகவே ஜகத்ஸ்ரஷ்டாவாய், ஸர்வ கர்ம ஸமாராத்யனாய், ஸர்வ பலப்ரதனான பரம புருஷனைச் சாத்திரம் காட்டும் வழியாலே அவச்யம் அங்கீகரித்தேயாக வேண்டும் என்று யுக்திகளாலேயே நிரூபித்து "கருமமும் கருமபலனுமாகிய காரணம்தன்னை" என்று ஆழ்வார் பேணின காரணமான பரம்பொருளை ஈச்வர ஸித்தியில் நிலைநாட்டினார்.



http://acharya.org

ஈச்வரஸித்தியின் இறுதியில் ‘‘ஏகப்ரதாந புருஷம் விவாதாத்யாஸிதம் ஜகத் ஞு சேதநா சேதநாத்மத்வாத் ஏகராஜக தேசவத்’’ என்னும் ச்லோகத்தினால், உபய விபூதியிலுள்ள ஜீவராசிகளும் அதிகாரி வர்க்கமான வானவர்களும் ராஜாதி ராஜனான ஸ்ரீமந் நாராயணனுடைய செங்கோலின் கீழே இடரின்றி வாழ்கின்றனர் என்னும் வேதாந்த ஸித்தாந்தத்தை ராஜராஷ்ட்ர த்ருஷ்டாந்தத்தினால் விளக்கிக் கூறினார்.

வேதைக வேத்யன் பரமபுருஷன் என்றே இவரபிப்ராயம். ஆயினும் வேதாந்த நிர்ணய ஸஹகாரியான தர்க்கங்களையே ஈச்வர ஸித்தியில் முக்கியமாகக் காட்டியருளினார்.

### ஸம்வித்ஸித்தியின் உட்பொருள்

ஸம்வித்ஸித்தியில் முக்கியமாக கேவலாத்வைத வாதத்தை நிரஸனம் பண்ணி விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தைப் பரமாசார்யர் நிலைநாட்டியிருக்கிறார்.

ஸத்தான (உளதான) பொருள் ஒன்றுதான; அநேகமில்லை என்னும் ஸதத்வைத வாதத்தையும் ஜ்ஞானம் ஒன்றே உள்ளது; அறியப்படும் பொருளும் அறிகிறவனும் வேறில்லை; என்கிற சிதத்வைத வாதத்தையும் கண்டித்து; ஞானம், ஞேயம், ஞாதா என்கிற மூன்றும் உள்ளன. அப்படியே சித், அசித், ஈச்வரன் என்கிற மூன்று தத்துவங்களும் பரமார்த்தமாயுள்ளவை என்று நிரூபித்தார்.

மேலும் ‘‘ஏகமே வாத்விதீயம் ப்ரஹ்ம’’ என்கிற ச்ருதி வசனத்திற்கு, பரம்பொருளுக்கு குணம், ரூபம், ஐச்வர்யம், ஒன்றுமில்லை என்று அபத்தப் பொருளுரைத்தனர் அத்வைதிகள். அவர்கள் கூறும் கூற்றைத் தகர்த்து பரம்பொருளான எம்பெருமானுக்கு நற்குணங்களும், திவ்யரூபங்களும், வைபவங்களும் பலபலவுண்டு, ‘‘ஸத்யம், ஜ்ஞான மநந்தம் ப்ரஹ்ம’’ என்கிற லக்ஷண வாக்யத்தினாலும் ‘‘பராஸ்ய சக்திர் விவிதைவ ச்ரூயதே ஸ்வாபாவிகீ ஜ்ஞானபலக்ரியாச’’ இத்யாதி ச்ருதி வசனங்களாலும் கணக்கில்லாத நற்குணங்களுக்கு இருப்பிடமாக எம்பெருமான் போற்றப்படுகின்றான். மேலும்,

‘‘நாந்தம் குணாநாம் கச்சந்தி தேநாநந்தோயமுச்யதே’’
‘‘மஹா குணத்வாத்ய மநந்த மாஹு’’
‘‘தேசத: காலதோ வாபி குணதோ வஸ்து தோபி வா,
அவதிர்யஸ்ய நைவாஸ்தி ஸோநந்த: பரிகீர்த்யதே’’

என்கிற அநந்த நாம நிர்வசனத்தினாலும் எம்பெருமான் எல்லையில்லாத நற்குணங்களையும் வைபவங்களையும் உடையவன் என்று விளங்கவில்லையா? ஆகையால் பிறர் கூறும் பொருள் தவறானது. எனவே எம்பெருமான் ஒருவனே ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவனாய் தானே எல்லாருக்கும் ப்ரதானனாய் இருக்கின்றான் என்கிற பொருளே ‘‘ஏகமே வாத்விதீயம் ப்ரஹ்ம’’ என்கிற ச்ருதி வசனத்திற்குப் பொருந்தின பொருளாம்.

‘‘ஏ கே முக்யாந்ய கேவலா;’’ என்கிற கோசத்தின்படி ப்ரதானன் என்கிற அர்த்தத்தையே ஏக வசனத்திற்கு இங்கு கொள்ளக் கடவது என்று நிர்வஹித்தருளினார். மேலும் லௌகிக உதாரணத்தைக் காட்டி இவ்வர்த்தத்தை மூதலித்துக் கொடுத்தார். சோழமன்னன் ஒருவனே அத்விதீயனாக இப்போது உளன் என்றால் எப்படி அவனே எல்லா



http://acharya.org

மன்னர்களுக்கும் தலைவன். அவனுக்குச் சமானமாயும், அவனைக் காட்டிலும. உயர்நதவனாயும் இப்போது மற்றொரு மன்னனில்லை என்கிற பொருளையே கொள்ளுகிறோமோ அப்படியே இங்கும் கொள்வது.

“யதா சோள ந்ருபஸ் ஸம்ராடத்வீதியோத்ய பூதலே
இதி தத்துல்ய ந்ருபதி நிவாரணபரம் வச:
நது தத் ப்ருத்ய தத் புத்ர களத்ராதி நிஷேதகம்
ததா ஸுராஸுர நர ப்ரம்ம ப்ரம்மாண்ட கோடய:
க்லேச கர்ம விபாகாத்யை ரஸ்ப்ருஷ்டஸ்யா கிலேசிது:
ஜ்ஞாநாதி ஷாட்குண்ய நிதே ரசிந்த்ய விபவஸ்ய தா:
விஷ்ணோர் விபூதி மஹிம ஸமுத்ர த்ரப்ஸ பிந்தவே”

என்கிற ச்லோகங்களினால் அநந்த கோடி ப்ரம்மாண்டங்களும் அதற்குட்பட்ட ஸகல தேவாதி சேதநர்களும் எம்பெருமானுடைய ஐச்வர்ய வைபவத்தில் அடங்கியவை. சுதந்திரமான வேறொரு வஸ்து இல்லை என்று நிரூபித்து

“ப்ரஹ்மாத்ம நாத்மவாபோயம் ப்ரபஞ்சச் சிதசித்மய:
இதி ப்ரமீயதே ப்ராம்மீ விபூதிர் ந நிஷித்யதே”

என்று அத்விதீய ச்ருதியினால் புருஷோத்தமனுடைய ஐச்வர்த்திற்கு ஒரு விதமான இடருமில்லை என்றருளிச் செய்தார்.

இவ்வண்ணம் நம்முடைய விசிஷ்டாத்வைத மதத்திற்கு அடிப்படையான கொள்கைகளை ஸம்வித் ஸித்தியுள் நிலைநாட்டிப் போந்தார்.

“எண் பெருக்கந் நலத்தொண் பொருளீறில வண்புகழ் நாரணன்”
“கணக்கறு நலத்தன் அந்தமில் ஆதியம்பகவன்”
“அமைவுடையமரரும் யாவையும் யாவரும் தானாம் அமைவுடை நாரணன்”
“காராயினகாள நன்மேனியினன் நாராயணன் நங்கள் பிரானவனே”
“நீராய் நிலனாய் தீயாய் காலாய் நெடுவானாய்”
“ஒத்தார் மிக்காரை யலையாய மாமாய”

இத்யாதியான ஆழ்வாரின் ஸ்ரீஸூக்திகளைக் கொண்டு “ஏகமேவாத்விதீயம்” என்கிற ச்ருதி வசனத்திற்குப் பொருத்தமான பொருளை விளக்கியருளினார்.

வேதம் தமிழ் செய்த மாறனாகையாலே அவருடைய திவ்ய ஸ்ரீஸூக்திகள் ஸம்ஸ்க்ருத வேதவாக்கியார்த்தங்களை உட்கொண்ட த்ராவிட வேத வாக்கியங்களாம். ஆகவே அவர் ஸ்ரீஸூக்திகளைக் கொண்டு ஸம்ஸ்க்ருத வேதவாக்கியங்களின் பொருளை நிர்ணயிப்பதில் குறையொன்றுமில்லை என்று தெளிந்திடுக.



http://acharya.org

# ஸ்ரீமார்க்கண்டேயர்

## ஸ்ரீ உ.வே. காரப்பங்காடு வேங்கடாசார்ய ஸ்வாமி

*(உபந்யாஸத் தொகுப்பு)*

இதிஹாஸபுராணங்களிலே ஸ்ரீமார்க்கண்டேயர் மஹாதபஸ்வி, ப்ரஹ்மரிஷி, பரமபாகவதோத்தமர், மஹாத்மா என்றெல்லாம் பலவாறு கொண்டாடப்படுகிறார். இவர் மூப்பு மரணங்களை வென்றவர். பகவானுடைய பெருமைகளை லோகத்தாருக்கு எடுத்துரைப்பதில் ஆற்றலும் ஊற்றமும் உடையவரானபடியாலே ஔதார்யம் மிக்கவராகக் கொண்டாடப் படுகிறார். நாம் இவருடைய பெருமைகளை நன்றாக அறிய வேண்டும். உத்தமரான இவருடைய சரித்ரம் நம்முடைய பாபங்களைப் போக்கி நம்மை நல்வழிப் படுத்தும். நமக்கு எல்லா மங்களங்களையும் அளிக்கும்.

மஹர்ஷிகளிலே வஸிஷ்டர், சக்தி, பராசரர், வ்யாஸர், சுகர் மற்றும் இவர்களுடைய உபதேச பரம்பரையிலே வந்துள்ள வைசம்பாயனர், ஸநகர், ஸுதபௌராணிகர் என்று அமைந்துள்ள பரம்பரை பரமவிலக்ஷணமான ஸ்ரீவைஷ்ணவரிஷி பரம்பரையாகும். இவர்களுக்குப் பெருமைகள் பலவுண்டு. அவற்றுள் மிக முக்யமானது பகவானுடைய வைபவங்களை இவர்கள் லோகத்தாருக்கு நன்கு எடுத்துரைத்திருப்பதாகும். இவர்களுடன் நாம் ஸ்ரீமார்க்கண்டேயரையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். உண்மையில் மஹர்ஷிகளில் இவருக்கு உண்டான பெருமைகள் மற்ற யாருக்குமே இல்லை என்று சொல்லலாம். இவர் ஒரு பெரிய வைபவசாலி ஆவார். இவருடைய பெருமைகள் மஹாபாரதம், ஸ்ரீமத்பாகவத மஹாபுராணம், பாத்ம புராணம் முதலான சாஸ்த்ரக்ரந்தங்களில் பரக்கச் சொல்லப்படுள்ளன.

பரமபதத்தில் முக்தர்களுக்குண்டான சில லக்ஷணங்கள், அவர்களுக்கு ஏற்படும் சில அநுபவங்கள் இவற்றின் ஏகதேசம் ஸம்ஸாரமண்டலத்தில் இருக்கும் சில விசேஷவ்யக்திகள் விஷயத்திலும் கேவலம் பகவதநுக்ரஹமடியாக ஏற்படுகிறது. ச்வேதத்வீபவாஸிகள் முக்தர்களுடைய லக்ஷணங்களையும் அவர்களுடைய அநுபவங்களையும் அதிகமாகப் பெற்றிருப்பவர்கள். திருவாய்ப்பாடியில் பஞ்சலக்ஷம் குடிப்பெண்களுக்கும் கிடைத்த ஸ்ரீக்ருஷ்ணாநுபவம் பரமபதத்தில் மஹாலக்ஷ்மிக்குக் கூடக் கிடையாது என்கிறார் சுகர் ஸ்ரீபாகவதத்திலே.

வடபெருங்கோயிலுடையான் விஷயத்தில் பெரியாழ்வாருக்கும், திருவேங்கடமுடையான் விஷயத்தில் ஸ்ரீஆளவந்தார் ஸ்ரீஅநந்தாழ்வானுக்கும் கிடைத்த புஷ்ப கைங்கர்யம், அவனிடத்திலே ஸ்ரீபெரியதிருமலைநம்பிகளுக்குக் கிடைத்த தீர்த்த கைங்கர்யம், ஸ்ரீகாஞ்சீ பேரருளாளன் விஷயத்தில் திருக்கச்சிநம்பிக்குக் கிடைத்த திருவாலவட்ட கைங்கர்யம், அவனிடத்திலே நடாதூர் அம்மாளுக்கும், திருநாரணன் விஷயத்திலே ஆய் ஜநந்யாசார்யருக்கும் கிடைத்த பாலமுது கைங்கர்யம் போன்ற இவற்றை பரமபதத்திலே நித்யமுக்தர்களுக்குக் கிடைக்கும் பேறுகளுக்கு ஸத்ருசமாகச் சொல்லலாம். இத்தகைய விசேஷவ்யக்திகளில் ஸ்ரீமார்க்கண்டேயரையும் ஒருவராக நாம் கொள்ளலாம், இவர்



http://acharya.org

பரமபதத்திலே இருப்பவர்களைப் போன்று எப்போதும் இருபத்தைந்து வயது யுவாவாகவே இருப்பவர்.

காலம் என்று ஒரு தத்வம். இது ஸம்ஸார மண்டலத்தில. உள்ள ஜீவாத்மாக்கள் அனைவர்களையும் தன் வசத்தில் வைத்திருக்கும். பரமபதத்தில்தான் காலமானது விலைசெல்லாது. ஸம்ஸாரமண்டலத்தில் இருப்பவர்களைக் காலமானது பாதித்துக் கொண்டே இருக்கும். பிறப்பு, இறப்பு, பிணி, மூப்பு எல்லாம் காலத்தை அநுஸரித்து கர்மாதீநமாய் ஸம்ஸாரிகளுக்கு ஏற்பட்டுக்கொண்டே இருக்கின்றன. ஸம்ஸாரிகளில் எப்பேர்ப்பட்டவர்களுக்கும் காலமானது சில ஸமயங்களில் அநுகூலமாய் இராது. யாவராயினும் காலத்தை அநுஸரித்துத்தான் இந்த ஸம்ஸாரமண்டலத்தில் வாழ வேண்டும். காலத்தினுடைய பெருமையைப் பற்றி பலி இந்த்ரனுக்கு உபதேசிக்கும் ஆச்சர்யமான ப்ரகரணம் மஹாபாரதத்தில் சாந்தி பர்வத்தில் உள்ளது நம்மால் அறியத்தக்கது.

தேவாஸுரயுத்தத்தில் ஒருமுறை தேவர்களுடைய பலம் ஓங்கியிருந்தது. இந்த்ரன் எல்லா அஸுரர்களையும் வென்றான். ஆனால் அவனுக்கு விரோசனன் புத்ரனான பலி இருக்குமிடம் தெரியவில்லை. ப்ரஹ்மாவிடம் சென்று பலி எங்கு இருக்கக்கூடும் என்பதை ஒருவாறு அறிந்து கொண்டான். ஆனால் ப்ரஹ்மா பலியைக் கொல்லக் கூடாது என்று இந்த்ரனுக்கு நியமித்து விட்டார். ப்ரஹ்மா சொன்னபடி பலி கழுதை உருவில் ஒரு பாழடைந்த வீட்டில் இருக்கிறான். அவனிடம் சென்ற இந்த்ரன் அவனைப் பலவாறு ஏளனம் செய்து பேசுகிறான். பலியினுடைய பெருமைகளை (அதாவது ஒரு காலத்தில் பலி எவ்வளவு கீர்த்தி, ஐச்வர்யம், பராக்ரமம் இவற்றுடன் வாழ்ந்தான் என்பதை) எடுத்துச் சொல்லி அந்தப் பெருமைகள் எல்லாம் இப்போது எங்கே போய்விட்டன என்று ஏளனம் செய்கிறான்.

அஸுரனே! நீ இப்போது கழுதையாய் உமிகளைத் தின்று காலத்தைப் போக்குகிறாய்! இத்தால் உனக்கு சுகம் உண்டாக வில்லையா? ஒரு காலத்தில் நீ எப்படிப்பட்ட ஐச்வர்யத்தையும், பராக்ரமத்தையும் கொண்டிருந்தாய் என்பது நினைவில் இருக்கிறதா? அவையெல்லாம் எங்கே போய் விட்டன? பகைவர்களுக்கு வசப்படும்படியான இந்த நிலை உனக்கு எப்படி வந்தது? நீ அஸுரர்களுக்கு அதிபதியாய் இருந்த காலத்தில் எல்லா அஸுரர்களும் உனக்கு அடிபணிந்தவர்களாய் இருந்தனர். ஆயிரமாயிரம் தேவஸ்த்ரீகள் நடனமாடி உன்னை ஆனந்திப்பித்திக் கொண்டிருந்தனர். ஆயிரமாயிரம் கந்தர்வர்கள் இசை பாடி உன்னை மகிழ்வித்துக் கொண்டிருந்தனர். ரத்னங்கள் பதிக்கப்பட்டதும் பொன் நிறமானதுமான உன்னுடைய குடை இப்போது எங்கு இருக்கிறது? ஒரு காலத்தில் பல யாகங்கள் செய்து இந்த லோகம் முழுவதையும் யாகபூமியாய் ஆக்கி வைத்திருந்தாயே! நீ செய்திருக்கும் யாகயஜ்ஞங்களுக்கும், தானங்களுக்கும் ஒரு அளவே இல்லையே! ப்ரஹ்மாவினால் கொடுக்கப்பட்ட மாலையும் இப்போது உன்னிடத்தில் காணப்படவில்லையே! உன்னுடைய ஐச்வர்யம், கீர்த்தி, பராக்ரமம் எல்லாம் எங்கே போய் விட்டன? இவற்றை முழுவதுமாக இழந்து இருக்கும் உனக்கு துக்கம் ஏற்படவில்லையா? என்றும், இதைப்போன்று இன்னும் பல வார்த்தைகளையும் சொல்லி பலியை ஏளனம் செய்கிறான் இந்த்ரன். இதற்குப் பதிலாக மஹாபலி சொல்லும் வார்த்தைகள் ஆச்சர்யமானவை.



http://acharya.org

தேவர்களுக்குத் தலைவனான இந்த்ரனே! விவேகம் இல்லாதவனாய்ப் பிறர்க்கு துக்கம் கொடுக்கும்படியான வார்த்தைகளைப் பேசுகிறாய். இது உனக்குப் பொருத்தமன்று. நான் இப்போது இழந்து விட்டதாய் நீ சொல்லும் ஐச்வர்யத்தையும், கீர்த்தியையும் மீண்டும் ஒரு காலத்தில் என்னிடத்தில் பார்க்கப் போகிறாய். இவையெல்லாம் ஒரு காலத்தில் வரும்; மற்றொரு காலத்தில் போகும். ஜ்ஞானம், பொறுமை இவைகளை உடைய ஸாதுக்கள் இவற்றால் துக்கப்பட மாட்டார்கள். நீ இப்போது மதியை இழந்து உன்னைப் பற்றி மிகவும் உயர்வாக நினைத்துக் கொண்டிருக்கிறாய். இன்று நான் இருக்கும் நிலை நாளை உன்னையும் வந்து சேரும் என்பதை அறிவாய்.

காலம் என்கிற மஹத்தான தத்வம் பரப்ரஹ்மத்தினுடைய சக்திவிசேஷம். இந்த லோகத்தில் காலத்தின் மாறுதலால் ஐச்வர்யம், பராக்ரமம் போன்ற எதுவும் ஒருவனிடத்தில் நிலைத்திராது. இதைக்கண்டு விவேகியாய் இருப்பவன் மனம் தளரமாட்டான். மிகவும் சக்தி வாய்ந்த காலத்தினால் பாதிக்கப் படாதவர் இந்த லோகத்தில் யாரும் இல்லை. இந்த லோகத்தில் ஒருவனுக்கு தனம் இருக்கலாம்; மற்றொருவனுக்கு அது இல்லாமற் போகலாம். ஒருவனுக்கு அழகு இருக்கலாம்; மற்றொருவனுக்கு அது இல்லாமற் போகலாம். ஒருவனுக்கு நற்குடிப்பிறப்பு இருக்கலாம்; மற்றொருவனுக்கு அது இல்லாமற் போகலாம். ஒருவனுக்கு ஸுகபோகங்களுடன் வாழ்க்கை அமையலாம்; மற்றொருவனுக்கு அவை இல்லாமற் போகலாம். ஆனால் யாருக்கும் இந்த நிலைகள் எப்போதும் இப்படியே இருக்க மாட்டா. காலத்தை அநுஸரித்து அவை மாறிக்கொண்டே இருக்கும். ஸத்வகுணம் தலையெடுத்தவர்களாய் நல்ல ஜ்ஞானத்தை உடையவர்களாய் இருப்பவர்கள் எல்லாவித பாபகார்யங்களிலிருந்தும் நிவ்ருத்தியை அடைவர்.

எப்பேர்ப்பட்டவர்களையும் காலம் தன் வசத்தில் வைத்துள்ளது. நீ நினைக்கிறபடி ப்ரபுத்தன்மையும், பராக்ரமும் உன் வசத்திலும் இல்லை; என் வசத்திலும் இல்லை. நாம் அனைவருமே காலத்துக்கு வசப்பட்டவர்கள். இதை அறிந்த எனக்கு சுகம் கிடையாது. இப்போது எனக்கு காலம் அநுகூலமாய் இல்லை. என்னுடைய நிலை எப்போதும் இப்படியே இருக்காது. உனக்குக் காலம் இப்போது அநுகூலமாய் இருக்கிறது. ஆனால் உன்னுடைய இந்த நிலையும் எப்போதும் இப்படியே இருக்காது. நீ செல்வச் செருக்கால் என்னை ஏளனம் செய்கிறாய். என்னுடைய இந்த நிலையிலும் வஜ்ராயுதத்தை ஏந்திய உன்னை ஒரு அடி கொடுத்தே வீழ்த்தி விட முடியும். எனக்கு காலம் இப்போது அநுகூலமாய் இல்லாதபடியால் என்னுடைய பராக்ரமத்தைக் காட்ட இது சமயமன்று என்று நிவ்ருத்தியை அடைந்திருக்கிறேன். நான் ஒரு காலத்தில் தேவர்களை நடுநடுங்கச் செய்திருக்கிறேன். நான் ப்ரஹ்மாவுடைய ரோகத்தையும் ஜயித்தவன். அஸுரர்ளுக்குத் தலைவனும், மிகுந்த பலசாலியும், பராக்ரமத்தையும் உடைய என்னையே காலம் அழுத்தி விட்டது என்றால் நீ எம்மாத்திரம்? என்றும், மேலும் சில வார்த்தைகளாலும் காலப்ரஹ்மத்தின் பெருமையை இந்த்ரனுக்கு எடுத்துச் சொல்கிறான் பலி.

ஸம்ஸாரமண்டலத்தில் காலத்தை வென்றவர் ஒருவர்தான் உண்டு. அவர்தான் ஸ்ரீமார்க்கண்டேயர். இவர் ப்ரஹ்மாவை ஒத்த தீர்க்கமான ஆயுஸ்ஸேப் பெற்றிருப்பவர். தாம்



http://acharya.org

விரும்பும் போது மட்டுமே மரணத்தை அடையும்படியான சக்தியை உடையவர். ஆழ்வார்களும் இவரைத்தம் பாசுரங்களில் கொண்டாடி இருக்கின்றனர். மார்க்கண்டேயனும் கரியே (திருவாய்மொழி 5-2-9) என்று நம்மாழ்வார் இவரை பகவத்பரத்வத்துக்கு ஸாக்ஷியாகக் கொண்டாடுகிறார். சாஸ்த்ரக்ரந்தங்களை ஆராய்ந்து பார்த்து பரதத்வத்தை நிர்ணயம் செய்ய அவச்யம் கிடையாது. ஸ்ரீமார்க்கண்டேயருடைய சரித்ரம், உபதேசம் இவை போதும் – பரதத்வம் நாராயணன் என்று அறுதியிடுவதற்கு – என்பது ஆழ்வார் திருவுள்ளம்.

ஸ்ரீமார்க்கண்டேயருடைய சரித்ரமாவது என்ன? ம்ருகண்டு மஹர்ஷிக்குத் திருக்குமாரராய்ப் பிறந்தவர் ஸ்ரீமார்க்கண்டேயர். இவர் சிறு பிராயத்தில் இருக்கும்போது விளையாடிக்கொண்டு இருந்தார். அதை இவருடைய பெற்றோர்கள் ரஸித்துக்கொண்டிருந்த போது ஒரு அசரீரி குரல் இவருடைய ஆயுஸ் முடியப் போகிறது என்று உரைத்தது. இத்தால் மிகவும் மனவருத்தமுற்றுத் துடிதுடித்த தன் பெற்றோர்கள் வருத்தம் தீருவதற்காக இவர் சிவனைக் குறித்துத் தவம் செய்தார். தன் பெற்றோர்கள் மன மகிழச்சிக்காக தனக்கு தீர்க்கமான ஆயுஸ்ஸேயும், தனக்காக மோக்ஷத்தையும் இவர் சிவனிடம் ப்ரார்த்திக்க, அவரும் இவருக்கு பகவத்பரத்வத்தை எடுத்துச் சொல்லி பகவான் நாராயணனே மோக்ஷ ப்ரதனானபடியால் அவனை ஆச்ரயிக்கும்படி செய்தார். இப்படி சிவனுடைய அநுக்ரஹமடியாக பகவத்ப்ரபாவத்தை உணர்ந்து கொண்ட ஸ்ரீமார்க்கண்டேயர், பகவானையே எல்லாமாகப் பற்றி அவன் இன்னருளால் பரம பாகவதோத்தமராம்படியான நிலையை அடைந்தார். பகவான் இவருக்குத் தன் ஸ்வரூபத்தைக் காட்டி அநுக்ரஹித்த சரித்ரம் அத்யாச்சர்யமானது. ஒருமுறை ப்ரஹ்மாவுடைய பகற்காலம் முடிந்து இரவுக் காலம் தொடங்குகிற ஸமயம். நைமித்திக ப்ரளயம் ஏற்படுகிறது. ப்ரளயஜலத்தில் ஆழ்ந்து கொண்டிருக்கிற மூன்று லோகங்களையும் பகவான் பால முகுந்தனாய் – வடபத்ரசாயியாய் – ஆலிலைக் கண்ணனாய், தன் திருவயிற்றில் வைத்து ரக்ஷித்துக் கொண்டிருக்கிறான். அவனுடைய அநுக்ரஹமடியாக ஸ்ரீமார்க்கண்டேயர் அவனுடைய திருவயிற்றில் புகுந்து, அவனால் ரக்ஷிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் லோகங்களைக் கண்டு களிக்கிறார். பிறகு அவனுடைய திருவயிற்றிலிருந்து வெளிவந்து அவனது திருவடிவாரத்திலேயே வாஸம் செய்து கொண்டு ப்ரளய காலத்தைக் கழிக்கிறார். யாருமே காணமுடியாத தன்னுடைய திவ்யமான ஸ்வரூபத்தை இப்படி ஸ்ரீமார்க்கண்டேயருக்குக் காட்டியருளிய பகவான், அவருக்குத் தன் ப்ரபாவங்களை எடுத்துச் சொல்கிறான். தன் பக்தர்களுடைய பெருமைகளையும் எடுத்துச் சொல்கிறான். தன் திருவவதாரங்களுக்கு உண்டான ப்ரயோஜனங்களையும் அருளிச் செய்கிறான். இது பகவான் ஸ்ரீமார்க்கண்டேயருக்குச் செய்தருளிய கீதோபதேசமாகும்.

---

WE THANK

| | | |
|---|---|---|
| P SUNDARARJAN | Rs. 10000/- | MARCH, 2024 |

WE WELCOME

| | | |
|---|---|---|
| S R S RAMANUJAM | LIFE MEMBER | CHANDIVALI, MUMBAI |



http://acharya.org

OUR SPONSOR

**SRI P SUNDARARAJAN IYENGAR**

Sri P Sundararajan Iyengar, who is currently President of the Mumbai Ramanuja Sabha, is one of the active Founders of the Sabha and he was also the General Secretary of the Sabha, till 2015, when he became the President. Along with Sri Pattabhiraman Swamy and Sri S Sadagopan Swamy who were the Founder President and Vice President, he was the major contributor for the founding principles and development of the Sabha. It will not be an exaggeration to say that today's membership of the Sabha (around 500) would have never come anywhere near this figure, but for the efforts of Sri Sundararajan. Literally, we can say, he lives, breathes, eats and sleeps on and for the Mumbai Ramanuja Sabha.



Born to Vaikuntavasis Smt Soundaravalli and Sri Parthasarathy Iyengar of Nagakkudaiyan in 1942, Sundararajan Swamy is 3rd among a family of 6 brothers and 5 sisters. He came to Mumbai after his graduation and joined BARC and grew up to become Senior Scientific Officer when he retired in 2002. He supported many of his siblings as well as relatives to come to Mumbai and find a job in Mumbai in BARC or elsewhere and settle down in life, during the time when it was difficult to get a proper job in the villages and small towns of Tamil Nadu. In Anushaktinagar he was very active in setting up and administering many spiritual and cultural organisations.

He has immense talent in Carnatic Music and is proficient not only in vocal singing and playing harmonium but also in writing lyrics and composing music for the same as well as singing Marathi devotional songs. He has composed, a number of songs on many Divyadesa Perumals and Azhwars-Acharyas. He has published books like "AAzhwar, Aacharyargal - Innisai Virundhu" and "Poongodhaip PugazhMaalai". Apart from being Blessed by his own Acharya, "Koyil Kandhadai Ilayavalli Balathanvi Varadachar Swamy of Sholingur, he was also fortunate to be Blessed by HH Sri Periya Thirumalai Thiruppathi Jeer, H H Sri Vanamamalai Jeer and H H Sri Varadha Ethiraja Jeer. He was also awarded the titles of "Ganaamrutha Varshi" in 1997 and "Sri Vanamamalai Mada Aasthana Sangeetha Isaikkavignar" in 2011 by H H Srimad Kalian Vanamamalai Ramanuja Jeer Swamiji. He has been conducting regular physical as well as online Divya Prabandha and Carnatic Music classes to students of all age, all over the globe and can be considered instrumental in guiding a large number of people, across the globe, to join and progress in the fields of music as well spirituality.

His wife, Smt Mythily Sundararajan, is a silent but great support to Sri Sundararjan Swamy and has been very instrumental in most of his achievements. She retired as Headmistress in a school. They have two amazing children Sri Srivatsan (in USA) and Smt Nandini Sriram (in Mumbai), both very talented, both professionally and otherwise and well-settled with their families.

Sabha and all the members wish Sri Sundararjan and all family members, a happy, healthy and contented life.



http://acharya.org